பக்கங்கள்: 10

காலைக்கதிர்
Kalaikkathir

விழியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 ஆவணி 24 திங்கட்கிழமை 09.09.2024 கதிர் 306

# ரணில் தன் தோல்வியை ஒப்புக்கொண்டுவிட்டார்

## அநுரவின் செயலாளராவதே அவர் விருப்பம் என்று சஜித் பிரேமதாச விளாசல்

ரணில் விக்கிரமசிங்க தனது தோல்வியை ஒப்பக்கொண்டுள்ளார். அவர் அநுரவின் தனிப்பட்ட செயலாளராகச் செயற்படவே விரும்புகிறார் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

நுவரெலியா - தலவாக்கலையில் நேற்று இடம்பெற்ற பரப்புரைக் கூட்டத்தின் போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

அத்தோடு இந்த ஜனாதிபதியே அவரின் தோல்வியை ஒப்புக்கொண்டுள்ளார். அநுர குமாரவின்தனிப்பட்டசெயலாளராவதற்குஅவர் விருப்பப்படுகின்றார்.தற்பொழுதுஜனாதிபதியும் அநுரகுமாரவும்ஒன்றாகஇணைந்துஎன்னை தோல்வியடைய செய்வதற்காக பணத்தைச் செலவிடுகின்றார்கள்.யார்எதைச்செய்தாலும் மக்கள் என்னை வெற்றி பெறச் செய்வார்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கின்றது.

200 வருடங்களுக்கும் அதிகமான வரலாற்றை கொண்ட இந்தத் தோட்டத் தொழிலாளர்கள் வியர்வை சிந்தி, கண்ணீர் வடித்து, இந்த நாட்டின் பொருளாதாரத்திற்கு வழங்குகின்ற ஒத்துழைப்பை மறக்க முடியாது. இந்தப் பக்கபலம் குறித்து ☞ 2

## இனி இது ரகசியம் அல்ல!

இனி இது இரகசியமில்லை பத்தியின் ரசிகர் ஒருவர் நேற்றுப் பகல் அழைப்பெடுத்தார். "என்ன! தலைவர் மாவையரை வீடு தேடிச் சென்று ரணில் சந்தித்திருக்கிறார், நீங்கள் அது பற்றி உள்வீட்டுத் தகவல்கள் எதுவும் எழுதவேயில்லை" என்றார். எழுதுமளவிற்கு உள்வீட்டுக்குள் எதுவும் நடந்ததாகத் தெரியவில்லை என்று அவருக்குச் சொல்லிச் சமாளித்துவிட்டேன்.

இருந்தாலும் ஏதாவது இருந்தால் என்ன செய்வது என்கிற பதற்றத்தில் கட்சியின் பிரமுகர் ஒருவரைத் தொடர்புகொண்டு, கட்சி ஒரு முடிவு எடுத்தால் தலைவர் தான் தனியாக ஒருமுடிவுஎடுக்கிறார்போலிருக்கிறதே என்று கேட்டேன். அதற்கு அவர் தந்த விளக்கம் சரியாக இருந்தது ☞ 2

## 50 சதவீத வாக்குச்சீட்டு அச்சிடப்பட்டது

ஜனாதிபதித் தேர்தலுக்கான உத்தியோகப்பூர்வ வாக்குச்சீட்டுகளை அச்சிடும் பணிகள் 50 சதவீதம் வரை நிறைவடைந்துள்ளதாக அரச அச்சகம் தெரிவித்துள்ளது. ☞ 2

## வட்டியில்லா கடனுக்கு விண்ணப்பிக்கலாம்

வட்டியில்லாகல்விக்கடன்திட்டத்தின் கீழ்இவ்வருடம்7000மாணவர்களுக்கு கடன்வழங்கஅமைச்சரவைஅங்கீகாரம் வழங்கியுள்ளது.

இதற்கான விண்ணப்பங்களை இன்று முதல் செப்டெம்பர் ☞ 8

## ரணிலுடன் இணைந்தார் தலதா

ஐக்கிய மக்கள் சக்தியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் தலதா அத்துகோரள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் ☞ 8

## சிலிண்டருக்கு வாக்களிக்க மறந்தால் மலையகக் கிராமங்கள்கூட மிஞ்சாது

### அப்புத்தளையில் மிரட்டல் விடுத்த ரணில்



சிலிண்டருக்கு வாக்களியுங்கள் இல்லாவிட்டால் சிலிண்டரும் இருக்காது கிராமங்களும்இருக்காதுஎன்றுஜனாதிபதி வேட்பாளர்,ஜனாதிபதிரணில்விக்ரமசிங்க தெரிவித்தார்.

அப்புத்தளையில் நேற்று நடைபெற்ற 'ரணிலால் முடியும்' பரப்புரைக் கூட்டத்தில் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

இந்தப் பிரதேசங்கள் பற்றி நான் 75 வருடங்களாக அறிவேன். இன்று குறைப்பாடுகள் இல்லாத அப்புத்தலை தேர்தல் தொகுதிக்கு வந்ததில் மகிழ்ச்சியடைகின்றேன். 2022 ஆம் ஆண்டில் இராணுவ நிகழ்ச்சி ஒன்றுக்காக இங்கு பிரதமராக வந்தபோது அத்தியாவசிய ☞ 8



## மலையக மக்களும் அனைவர் போல வாழும் சூழல் சஜித் ஆட்சியில் கிட்டும்

### மனோ கணேசன் எம்.பி. தெரிவிப்பு

சஜித் பிரேமதாசவுடன் முதன்முறையாக நாம் உடன்பாடு செய்துள்ளோம். இதன் மூலம் எமது மலையக மக்களும் அனைத்து உரிமைகளையும் பெற்றவர்களாக வாழக்கூடிய சூழ்நிலை உருவாகும். இரண்டாவது குடிமக்களாக அல்லாமல் ஏனையோர்போல் வாழும் நிலை ஏற்படும். இதன் அடிப்படையிலேயே ☞ 8

## தலிபான் போன்ற ஆட்சிக்கே அநுரகுமார முயற்சிக்கிறார்

### ஐ.தே.கட்சி கடும் விமர்சனம்

அடிப்படைவாத கொள்கையுடை தலிபான் ஆட்சியை போன்ற ஆட்சிக்கே அனுரகுமார முயற்சிக்கிறார். அந்த நிலைக்கு எமது நாட்டை கொண்டு செல்ல மக்கள் இடமளிக்கப்போவதில்லை என்று ஐக்கிய தேசிய கட்சி கொழும்பு மாவட்ட அமைப்பாளர் நிஷாந்த ஸ்ரீ வர்ணசிங்க தெரிவித்தார்.

ஐக்கிய தேசிய கட்சி தலைமையகமான ☞ 8

## 5 பேர் மட்டும் வீடுகளுக்கு செல்ல முடியும்

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும்வேட்பாளர்களின்பரப்புரை நடவடிக்கைகளுக்காக ஐந்து பேர் மாத்திரமே வீடுகளுக்கு செல்ல முடியும் என தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல்.ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

நேற்றுசெய்தியாளர்களைச் சந்தித்த அவர், வீடுகளுக்கு பேரணியாக சென்று துண்டுப் பிரசுரங்களை விநியோகிக்க சட்டம் இடமளிக்கவில்லை எனசுட்டிக்காட்டினார். எனவே ஐந்துபேருக்குமேற்படாதகுழு மட்டுமேவீடுகளுக்குச் ☞ 8

## வெளிநாட்டு விடுமுறையில் சென்ற அரச ஊழியர்களுக்கான அறிவிப்பு

வெளிநாட்டு விடுமுறை நிறைவடைந்த பின்னரும் உரிய தினத்தில் கடமைக்கு சமுகமளிக்காத அரச ஊழியர்கள் சேவையிலிருந்து விலகிச்சென்றதாககருதப்படுவார்கள் என பொதுநிர்வாக அமைச்சு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் பொதுநிர்வாக அமைச்சு செயலாளரின் கையொப் பத்துடன் சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

வெளிநாட்டுவிடுமுறைகாலத்தை நீடிக்க வேண்டுமாயின் முதலாவது விடுமுறைகாலம்நிறைவடைவதற்கு முன்னர் அதற்கான அனுமதியை பெற்றுக்கொள்ள ☞ 8

## வடக்கு, கிழக்கு மக்களின் பிரச்சினைக்கு தீர்வை பெற்றுக்கொடுப்பாராம் விஜயதாச



வடக்கு மற்றும் கிழக்கு மக்களின் அடிப்படைபிரச்சினைகளுக்குதீர்வினை பெற்றுக்கொடுத்துள்ளேன். நிலையான தீர்வுக்கு உரிய நடவடிக்கைகளை செயற்படுத்துவேன் என்று தேசிய ஜனநாயக முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் ஜனாதிபதி சட்டத்தரணி விஜயதாச ராஜபக்ச தெரிவித்தார்.

மார்ச் 12 இயக்கத்தின் ஏற்பாட்டில் பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டுமண்டபத்தில் நேற்று இடம்பெற்ற 'ஜனாதிபதி வேட்பாளர்களுக்கு இடையிலானவிவாதத்தில் அவர் இதனைத் தெரிவித்தார்.

கேள்வி - சுகாதாரம், நலன்புரி, கல்வி, பொது போக்குவரத்து, வீட்டு வசதி, சமூக பாதுகாப்பு, ஆகிய அடிப்படை தேவைகளை சகல மக்களும் பெற்றுக்கொள்ளும் வாய்ப்பு காணப்படவேண்டும். நீங்கள் ஆட்சிக்கு வந்தால் இந்த அடிப்படைத்தேவைகளைஅனைவரும் நியாயமானவகையில்பெற்றுக் ☞ 2

## தமிழ் அல்லது முஸ்லிம் ஒருவர் ஜனாதிபதியாகும் சூழ்நிலை ஏற்பட்டால்தான் இலங்கை முன்னேறும்

### ஜனாதிபதி வேட்பாளர் திலகராஜ் தெரிவிப்பு



இந்தநாட்டில்தமிழ்,முஸ்லிம்கள்ஜனாதிபதிஜனாதியாகும் சூழல் ஏற்பட்டால் மாத்திரமே இந்த நாட்டை முன்னேற்ற முடியும் என்று ஜனாதிபதி வேட்பாளராகச் சுயேச்சையாகப் போட்டியிடும் மயில்வாகனம் திலகராஜா தெரிவித்தார்.

மார்ச் 12 இயக்கத்தின் ஏற்பாட்டில் பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று இடம் பெற்ற ஜனாதிபதி வேட்பாளர்களுக்கிடையிலான விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். ☞ 2

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

போன்றுதான் எனக்குப்பட்டது. அவர் என்ன சொன்னார் என்றால், வீடுதேடி வந்தவரை வரவேற்று அவரை வாழ்த்தி அனுப்புவதுதான் தமிழரின் பண்பு. அதிலும் மாவை ஐயா இதுவிடயத்தில் அதிகம் கவனமாக இருப்பவர். தன்னுடைய வீட்டுக்கு வந்தவர்கள் மனம்நொந்து சென்றுவிடக்கூடாது என்பதற்காகவே அவர்களுடன் கடினமான வார்த்தைகளில் பேசுவதைக்கூட அவர் விரும்புவதில்லை. தன் வீட்டில் மட்டுமல்ல, தனக்கு நெருக்கமான வேறு யார் வீட்டில் அப்படி யாராவது விருந்தினர்களை நோகடித்தார்கள் என்றால், அப்படிச்செய்யக்கூடாது என்று அவர்களுக்கே நாசூக்காகச் சொல்லக்கூடியவர். அதனால் அவர் ரணிலை வரவேற்று பொன்னாடை போர்த்தியதோ அல்லது வெற்றிபெற்று சமஷ்டி இலங்கையின் முதல் ஜனாதிபதியாக வாருங்கள் என்று வாழ்த்தியதோ அவரது அரசியல் நிலைப்பாட்டு மாற்றமாக நான் நினைக்கவில்லை என்றார்.

ரணிலைச் சந்தித்த பின்னர் மாவையர் வழங்கியசெவ்வியைக்கூர்ந்துஅவதானித்தால் அதனை நன்கு உணர்ந்துகொள்ளவும் -முடியும். ரணிலைத் சந்தித்துத் தான் பேச ஒப்புக்கொண்டது அவருக்கு ஆதரவளிக்கும் நிலைப்பாடு என்று அவர் நினைக்கக்கூடும் ஆனால், அது அப்படியல்ல என்ற ஒரு தொனிப்பொருளில் அவரது கருத்து அமைந்திருந்தது. எனவே அந்தப் பிரமுகர் கூறிய விளக்கம் சரியாகக்கூட அமையலாம். இருந்தாலும் பத்திரிகையாளர் புத்தி சும்மா இருக்குமா? அதனால், சஜித் பிரேமதாச யாழ்ப்பாணம் வந்திருந்தபோதும் மாவையருக்கு இதுபோன்ற சந்திப்புக்கு அழைப்பு விடுக்கப்பட்டது, பேராசிரியர் பீரிஸ் ஓரிருதினங்களுக்குமுன்னர்யாழ்ப்பாணத்தில் இருந்துபுறப்படுவதற்குமுன்னர்ஒருவாரகாலம் இங்கு தங்கியிருந்தபோதும் மாவையரைச் சந்திப்பதற்கு அழைப்பு அனுப்பப்பட்டது. ஆனால் தனக்கு உடல்நலம் சரியில்லாத காரணத்தால் ஓய்வு எடுக்கச்சொல்லி மருத்துவர்கள் அறிவுறுத்தியுள்ளனர் என்று காரணம்கூறிஅந்தச்சந்திப்புக்களைத்தவிர்த்த மாவையர் எப்படி ரணிலின் சந்திப்புக்கு மட்டும் உடனே ஒப்புக்கொண்டார் என்று அவரிடம் கேட்டேன்.

அவரும் சிரித்துக்கொண்டே. எப்படியிருந்தாலும் ஒரு நாட்டின் ஜனாதிபதி தன்னைச் சந்திக்க வருவதாக அறியத்தரும்போது அது தனியானதுதானே மற்றையவற்றுடன்ஒப்பிடக்கூடியது அல்லவே! அதுவும்போக ரணிலும் மாவையரும் நீண்டகாலமாக நன்கு தெரிந்தவர்கள், பழகியவர்கள் அதனால் அவரது சந்திப்பைத் தவிர்க்க முடியாது போயிருக்கலாம் என்றார். அவர் சொல்-லும் விளக்கம் சரியா இல்லையா என்பதை உங்களின் முடிவுக்கே விட்டுவிடுகின்றேன் வாசர்களே!

இதற்கிடையில் மாவையரின் மகனும் சம்மந்தியான சசிகலா ரவிராஜ்ஜும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் விடுதி ஒன்றில் சந்தித்துப் பேசியிருக்கின்றனர். இந்தச் சந்திப்பையும் புலம்பெயர் வர்த்தகர் ஒருவரே ஏற்பாடு செய்திருக்கிறார். அவரே கண்டியில் சஜித் பிரேமதாசவை மாவையரின் மகன் கலையமுதனும் மற்றும் சில தமிழ் அரசுக் கட்சி இளைஞர் அணியினரும் சென்று சந்திக்கவும் இடைத்தரகராக நின்று ஏற்பாடு செய்திருந்தார். அதன் பின்னர் அவரது நிகழ்நிலைப் பத்திரிகையில் தமிழ் அரசுக் கட்சியின்இளைஞர்அணிமுயற்சியினாலேயே கட்சி சஜித்தை ஆதரிக்கும் முடிவை எடுத்தது என்று செய்தியும் வெளியாகி இருந்தது. இந்த இரகசியச் சந்திப்பு ஒரு சர்ச்சையாக வெடித்த நிலையில், மாவையரின் மகன் திடீரென சனிக்கிழமை தமிழ் தேசியப் பொதுக் கட்டமைப்பின் தமிழ் பொது வேட்பாளரை ஆதரித்து வலி. வடக்குப் பகுதியில்புளொட்டின்முன்னாள்மாகாணசபை உறுப்பினர் கஜதீபனுடன் துண்டறிக்கைகள் வழங்கிக்கொண்டிருந்தார் கலையமுதன். அதன் பின்னர் ஓடிப்போய் அவரும் அவரது மாமியாரும் மேலும் சில தமிழ் அரசுக் கட்சி இளைஞர்அணியினரும்ரணிலைச்சந்தித்தப் பேசியுள்ளனர். தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவை இரண்டாகப் பிரிப்பது தொடர்பில அவருடன் கலந்துரையாடப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. இருந்தாலும் சஜித்துடன் தன்னைத் தொடர்புபடுத்தி வந்த செய்திகளால் குழப்பமடைந்திருக்கும் கலையமுதன் அதனைச் சரி செய்யும் முயற்சிக்கிறார் போலுள்ளது. அதனால் தான் எல்லாத் தரப்புக்களுக்கும் ஆதரவு என்ற தோற்றப்பாட்டை ஏற்படுத்தப் பார்க்கிறார்.

இதில் தேசியப் பேசிக்கொண்டு தமிழ் அரசுக் கட்சிக்குள் அரசியல் செய்யும் புலம்பெயர் தமிழர் தனது லாபத்திற்காக இத்தகையசந்திப்புக்களில்இவர்களைஇழுத்து விழுத்திவிடுகின்றார் என்கிற பார்வையும் உண்டு. அவர் இழுத்தி வி-ழுத்தினாலும் அதனைத் தடுத்து நிறுத்த வல்லமையும் திராணியுமற்றவர்களாக அவர்கள்?

**இடிமின்னல்**

(idiminnal@gmail.com)

## ரணில் தன்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாம் பெருமைப்பட்டு அவர்களுக்கு நன்றி கூறி கௌரவ படுத்துகின்றோம். அத்தோடு இந்த நாட்டின் மக்கள் என்ற வகையில் அவர்களைச் சமமான முறையில் ஏற்றுக் கொள்கின்றோம்.

தோட்டத் தொழிலாளர்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற அரசியல் ரீதியான தகுதியானபிரதிநிதித்துவத்தைவழங்குவதோடு, காணிக்கான, வீட்டுக்கான உரிமையை பெற்றுக் கொடுப்பதற்கு உறுதி பூண்டு, லயன் அறைகளுக்கு பதிலாக தனியான குடியிருப்பு கிராமங்களை அமைத்துக் கொடுப்பதற்கான அடித்தளத்தை இடுவோம்.

தோட்டத் தொழிலாளர்களை சிறு தேயிலைத் தோட்ட உரிமையாளர்களாக மாற்றுவோம். தோட்டத் தொழிலாளர்களின் சம்பளத்தை 1000 ரூபா 1500 ரூபா 2000 ரூபா ஆக வழங்குவோம், பெற்றுத் தருவோம் என தேர்தல் காலங்களில் பொய் வாக்குறுதிகளை வழங்குகின்றார்கள். லயன் அறைகளில் வாழ்ந்து கூலித் தொழிலில் வாழ்க்கையை கழிக்கின்ற இந்த மக்களுக்காகவும், இந்தச் இளைஞர்களுக்காகவும், விவசாய காணியை வழங்கி, சிறு தேயிலைத் தோட்ட உரிமையாளர்களாக மாற்றுவோம்.

அத்தோடு விவசாயிகளுக்கு தேவையான உரத்தை 5000 ரூபாவிற்கு வழங்குவோம் என்று கூறியபோது தாம் அதனை 4000 ரூபாவுக்கு வழங்குவோம் என ஜனாதிபதி சொல்லிக்கொண்டு திரிகிறார்.

தொடக்கப் பாடசாலை முதல் கல்வித் துறையை மேம்படுத்துவதோடு சகல வசதிகளையும் வழங்குவோம். சிறந்த கல்வியை வழங்குவதற்காக நாம் அர்ப்ப ணிப்புடன் செயல்படுவோம். பாடசாலை கட்டமைப்பை பலப்படுத்துவதோடு பல புதிய தேசியபாடசாலைகளையும்உருவாக்குவோம். சிங்களம், தமிழ், முஸ்லிம், பேஃகர் அனைவருக்கும் கல்வியிலும் சுகாதாரத் துறையிலும் முன்னேற்றத்தை கொண்டு வருவோம்.

தகவல் தொழில்நுட்பம், கணினி விஞ்ஞானம், திறன் விருத்தி கல்வி போன்ற வற்றை நடைமுறைப்படுத்தி, சர்வதேச மட்டத்திலான தொழிற்பயிற்சி நிலையங் களையும் உருவாக்கி இளைஞர்களை அறிவு ரீதியாகஉயர்த்துவோம். அத்தோடுநுவரெலியா இளைஞர்களுக்காக புதிய பல்கலைக்கழகம் ஒன்றையும் உருவாக்குவோம். அதன் ஊடாக புத்தாக்க துறையை கற்பித்து புதிய வர்த்தக முறைகளை விரிவுபடுத்த நடவடிக்கை எடுப்போம் என்றார்.

## 50 சதவீத ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அச்சிடப்பட்டுள்ள வாக்குச்சீட்டுகள் தேர்தல் ஆணைக்குழுவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக சிரேஷ்ட அதிகாரி யொருவர் கூறியுள்ளார்.

உத்தியோகப்பூர்வ வாக்குச்சீட்டு களை அச்சிடும் பணிகளை அடுத்த வாரத்திற்குள் நிறைவு செய்ய எதிர்பார்த்துள்ளதாக அரச அச்சகம் குறிப்பிட்டுள்ளது.

இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் ஒரு கோடியே 71 இலட்சத்து 40 ஆயிரத்து 354 பேர் வாக்களிக்க தகுதிபெற்றுள்ளனர்.

## தமிழ் அல்லது ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கேள்வி - நாணய நிதியத்தின் செயற்திட்டம் அமுல்படுத் தப்பட்டுள்ள பின்னணியில்பொருளாதாரநெருக்கடிக்குதீர்வு காண்பதற்கான திட்டங்களை குறிப்பிடுங்கள்?

பதில்: -சர்வதேச நாணய நிதியத்துடனான செயற்திட்டம் வேண்டுமா, இல்லையா என்பது தொடர்பில் பேசப்போவதில்லை. ஏனெனில் நாணய நிதியத்துட னான செயற்பாடுகள் நிறைவ டைந்துவிட்டன.

அரசமைப்பு பற்றி தொடர்ச்சியாக பேசுகிறோம். மத்திய வங்கியின் யாப்பு பற்றி யாரும் அவதானம் செலுத்துவதில்லை. இந்த யாப்புக்கும், சர்வதேச நாணய நிதியத்துக்கும் இடையிலான தொடர்பு என்ன என்பது பற்றி சிந்தித்ததுண்டா, இதனை ஆராய்ந்து பார்த்தால் சர்வதேச நாணய நிதியம் குறித்து தீர்மானத்தை எடுக்கலாம். மத்திய வங்கியின் யாப்பில் சர்வதேச நாணய நிதியம் என்று குறிப்பிடப்பட்டுள்ளதாக அறிய முடிகிறது. ஆகவே இதனை மீள்பரிசீலனை செய்ய வேண்டும்.

பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள்வதற்கு தற்போது எடுத்துள்ள தீர்மானங் களை தொடர வேண்டும். இருப்பினும் அது நிலையானதாக காணப்படக்கூடாது. தேசிய பொருளாதாரத்துக்கு பொருத்தமான கொள்கைகளை வகுத்துக்கொள்ள வேண்டும்.

கேள்வி - சுகாதாரம், நலன்புரி, கல்வி, பொது போக்குவரத்து, வீட்டு வசதி, சமூக பாதுகாப்பு, ஆகிய அடிப்படை தேவைகளை சகல பிரஜைகளும் பெற்றுக் கொள்ளும் வாய்ப்பு காணப்பட வேண்டும். நீங்கள் ஆட்சிக்கு வந்தால் இந்த அடிப்படைத் தேவைகளை அனைவரும் நியாயமான வகையில் பெற்றுக் கொள்வதற்கு எடுக்கும் யதார்த்தமான நடவடிக்கைகள் மூன்றை குறிப்பிட முடியுமா ?

பதில்:- நான் லயன் அறையில் பிறந்தேன். லயன் அறையை ஜனாதிபதி தேர்தல் அலுவலகமாக மாற்றியமைத்து அங்குதான் எனதுகொள்கைபிரகடனத்தைவெளியிட்டேன். எமது 10 இலட்சத்துக்கும் அதிகமான மக்கள் கடந்த 200 வருட காலமாக லயன் அறைகளில்தான் வாழ்கிறார்கள். ஆனால் நாம் சமவுரிமை பற்றி பேசுகிறோம்.

பெருந்தோட்டப் பகுதியில் வாழ்பவர்களில் 40 சதவீதமானோருக்கு இன்றும் மலசலகூட வசதிகள் இல்லை என்று மத்திய வங்கியின் அறிக்கையில்குறிப்பிடப்பட்டுள்ளது. வீடமைப்பு, கல்வி மற்றும் சுகாதாரம் ஆகிய அடிப்படை வசதிகளில் பெருந்தோட்ட மக்களுக்கு இன்றும் அநீதி இழைக்கப்பட்டுள்ளது.

கேள்வி: வங்குரோத்து நிலைக்கு ஊழல் மற்றும் அரச நிர்வாகத்தின் பலவீனம் பிரதான காரணிகளாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. வெளிப்படைத்தன்மை, சிறந்த நிர்வாகம் மற்றும் ஊழல் ஒழிப்பு ஆகியன தொடர்பில் உங்களிடமுள்ள திட்டங்கள் என்ன ?

பதில்: -அரச நிர்வாகம் டிஜிட்டல் மயப்படுத்தினால் ஊழல் மோசடிகளைக் குறைக்க முடியும். ஆட்சியாளர்களின் அபிவிருத்திக் கருத்திட்டங்களை மதிப்பாய்வு செய்யவேண்டும். அவ்வாறு மதிப்பாய்வு செய்தால் ஊழல் மோசடிகள் இடம்பெறாது. 2012 முதல் 2022 ஆம் ஆண்டுவரையான 10 வருட காலப்பகுதியில் அபிவிருத்திக்கான முதலீடுகளில் 12 சதவீதமானவை மாத்திரமே அபிவிருத்தியடைந்துள்ளன. 88 சதவீத முதலீடுகளுக்கு நேர்ந்தது என்ன.

கேள்வி: 30 வருட காலப் போரால் பாதிக்கப்பட்ட அனைவருக்கும் நியாயத்தை பெற்றுக் கொடுப்பதற்கும், தேசிய நல்லிணக்கத்தை உறுதிப்படுத்துவதற்கும் முன்னெடுக்கும் நடவடிக்கைகள் என்ன ?

பதில்: - இந்த சந்தர்ப்பத்தில் ஒரு தமிழராக நான்கலந்துக்கொண்டுள்ளேன். எம்மைஇந்திய தமிழர்கள்என்றேஅடையாளப்படுத்துகிறார்ள். இலங்கையர்களாக எம்மை இன்றும் அங்கீகரிக்கவில்லை. அர்த்தமுள்ள குடியுரிமையைக் கோருகிறோம். இந்த நாட்டில் தமிழ், முஸ்லிம்கள் ஜனாதிபதி ஜனாதியாகும் சூழல் ஏற்பட்டால் மாத்திரமே இந்த நாட்டை முன்னேற்ற முடியும்.

## வடக்கு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொள்வதற்கு எடுக்கும் யதார்த்தமான நடவடிக்கைகள் மூன்றை குறிப்பிட முடியுமா?

பதில்: நாட்டின் கல்விக் கட்டமைப்பு முழுமையாக மறுசீரமைக்கப்பட வேண்டும். அதற்கான யோசனைகளை நாடாளுமன்ற தெரிவுக்குழு ஊடாக முன்வைத்துள்ளோம். அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. வருடாந்தம் 4 இலட்சத்துக்கும் அதிகமான மாணவர்கள்உயர்தரபரீட்சைக்குதோற்றுகின்ற நிலையில் 50 ஆயிரத்துக்கும் குறைவான மாணவர்களுக்கு மாத்திரமே பல்கலைக்கழக அனுமதி கிடைக்கிறது. ஆகவே உயர்தர பரீட்சைக்கு தோற்றும் மாணவர்கள் அனைவருக்கும் பல்கலைக்கழகத்துக்கு இணையான உயர் கல்வியை வழங்கும் யோசனைகளை முன்வைத்துள்ளோம்.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவை இரத்து செய்து அதற்கு பதிலாக உயர் கல்வி ஆணைக்குழு சட்டவரைவை தயாரித்துஜனாதிபதியிடம்ஒப்படைத்துள்ளேன். இந்த திட்டங்களை முழுமையாக அமுல்படுத்தினால் நாட்டின் கல்வித்துறை முன்னேற்றமடையும். அனைவருக்கும் சம வாய்ப்பு வழங்கவேண்டும்.

நாட்டின் பொது போக்குவரத்து சேவை மிக மோசமானது. 2003ஆம் ஆண்டு ஆட்சியில் இருந்த ஆளும்தரப்பு இலங்கை போக்குவரத்து சபையை விற்பனை செய்தது. இதற்கு எவரும் எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை. தனி மனிதனாக நான் எதிர்ப்புத் தெரிவித்து உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்தேன். இதன் பின்னரே கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தங்கள் இரத்துச் செய்யப்பட்டன.

பொதுப்போக்குவரத்து துறையை மேம்படுத்துவதாயின் அரச - தனியார் பங்குடைமையிலான முறைமைக்கு செல்ல வேண்டும். ஆளும்தரப்பால் மாத்திரம் தனித்து செயற்பட முடியாது.

நாட்டு மக்கள் அனைவருக்கும் சுகாதார காப்புறுதி திட்டங்களை வழங்கவேண்டும். இலத்திரனியல் முறைமை ஊடாக இதனை அறிமுகப்படுத்த முடியும்.

கேள்வி: வங்குரோத்து நிலைக்கு ஊழல் மற்றும் அரச நிர்வாகத்தின் பலவீனம் பிரதான காரணிகளாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. வெளிப்படைத்தன்மை, சிறந்த நிர்வாகம் மற்றும் ஊழல் ஒழிப்பு ஆகியன தொடர்பில் உங்களிடமுள்ள திட்டங்கள் என்ன ?

பதில்:- நிதி வங்குரோத்துக்கான காரணத்தை அனைவரும் அறிவோம். வங்குரோத்து நிலைக்குச் செல்லக்கூடாது என்பதற்காக எடுத்த பல தீர்மானங்களை முறையாக செயற்படுத்தாத காரணத்தால் இன்று இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது.

தொடர்ச்சி 8ம் பக்கம்....



காலைக்கதிர்
Kalaikkathir

# அதிகாரப் பகிர்வை தீர்மானிக்கும் அதிகாரம் எந்த அரசியல்வாதிகளுக்கும் கிடையாதாம்

## சர்வஜன வாக்கெடுப்புக்கு செல்லத் தயார் என்கிறார் திலித் ஜயவீர



அதிகார பகிர்வு மற்றும் அதிகார பகிர்வின் கட்டமைப்பு தொடர்பில் இதுவரை எவ்வித கருத்துக்கணிப்பும் மேற்கொள்ளப்படவில்லை. அரசியல்வாதிகள் ஒருசிலர் ஒன்றிணைந்து அதிகார பகிர்வு தொடர்பில் தீர்மானம் எடுப்பது நியாயமற்றது. யாருக்கு அதிகார பகிர்வு அவசியம் என்பதை மக்களிடம் கேட்க வேண்டும். அதற்கு சர்வஜனவாக்கெடுப்புக்குசெல்லவேண்டும். அதிகார பகிர்வு பற்றி பேசும் அரசியல்வாதிகள் தங்களை வளப்படுத்திக் கொள்ளவே முயற்சிக்கிறார்கள். மக்களுக்கு ஏதும் கிடையாது. ஜனநாயக ஆட்சி முறைமை என்றால் மக்களிடம் கேட்க வேண்டும்.

மக்களின் தீர்மானத்துக்கு அமையவேசெயற்படவேண்டும். அரசியல்வாதிகள் குறுகிய நோக்கங்களுக்காக அதிகார பகிர்வைபயன்படுத்துவார்களாயின் தேசியத்துக்காக அதனை தோற்கடிக்க வேண்டும் என சர்வஜன சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் திலித் ஜயவீர தெரிவித்தார்.

மார்ச் 12 இயக்கத்தின் ஏற்பாட்டில் பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் சனிக்கிழமை இடம்பெற்ற 'ஜனாதிபதித் தேர்தல் விவாதத்தில் சர்வஜன சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் திலித் ஜயவீர கலந்துகொண்டார். ஜனாதிபதி சட்டத்தரணி சாலிய பீரிஸ் கருத்தாடலை தொகுத்து வழங்கினார்.

கேள்வி மற்றும் அதற்கான பதில் வருமாறு –

**கேள்வி:** சுகாதாரம், நலன்புரி, கல்வி, பொது போக்குவரத்து, வீட்டுவசதி, சமூக பாதுகாப்பு, ஆகிய அடிப்படை தேவைகளை சகல பிரஜைகளும் பெற்றுக் கொள்ளும் வாய்ப்பு காணப்பட வேண்டும். நீங்கள் ஆட்சிக்கு வந்தால் இந்த அடிப்படைத் தேவைகளை அனைவரும் நியாயமான வகையில் பெற்றுக் கொள்வதற்கு எடுக்கும் யதார்த்தமான நடவடிக்கைகள் மூன்றை குறிப்பிட முடியுமா ?

**பதில்:** அடிப்படை தேவைகளை நிறைவேற்றிக்கொடுப்பது அரசாங்கத்தின் பொறுப்பாகும். எதனையும் வேறுப்படுத்த முடியாது. தேசிய மூலோபாய செயற்திட்டத்தை நாங்கள் வெளிப்படுத்தியுள்ளோம். அனைத்து துறைகள் மற்றும் தேவைகளையும் ஒன்றிணைக்கும் திட்டங்களை முன்வைத்துள்ளோம்.

சுதந்திரத்துக்கு பின்னரான காலத்தில் ஆட்சியில் இருந்த அரசாங்கங்கள் ஏதும் தேசிய மூலோபாயத் திட்டங்களை முன்வைக்கவில்லை. சகலபிரஜைகளையும் கருத்திற்கொண்டு தேசிய மூலோபாய செயற்திட்ட அதிகாரசபையை ஸ்தாபிக்கும் யோசனையை எமது திட்டத்தில் முன்வைத்துள்ளோம்.

**கேள்வி:** பொருளாதார நெருக்கடியில் இருந்து மீட்சிப் பெறுவதற்கு பல திட்டங்களை முன்வைத்துள்ளீர்கள். சர்வதேச நாணய நிதியத்தின் செயற்திட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ள நிலையில் பொருளாதார மீட்சிக்காக நடைமுறைக்கு சாத்தியமானவற்றை குறிப்பிட முடியுமா ?

**பதில்:** சர்வதேச நாணய நிதியத்தின் செயற்திட்டம் குறித்து விசேடமாக கலந்துரையாட வேண்டும். முதலீடுகளை அதிகளவில் பெற்றுக் கொள்வதற்கு சட்ட ரீதியில் மாற்றங்களை ஏற்படுத்த வேண்டும். சகல தொழிற் றுறைகளிலும் இலங்கையின் உற்பத்தி சின்னத்தை மேம்படுத்த விசேட திட்டங்களை தயாரித்துள்ளோம்.

முதலீட்டாளர்கள் இலகுவான முறையில் கொடுக்கல்வாங்கல்களை முன்னெடுப்பதற்கான வசதிகள் ஏற்படுத்திக்கொடுக்க வேண்டும். மனித வளத்தை மேம்படுத்தி அதனூடாகவே பொருளாதாரத்தை விருத்தி செய்ய முடியும்.

**கேள்வி :** சர்வதேச நாணய நிதியத்தின் செயற்திட்டம் குறித்து உங்களின் நிலைப்பாடு என்ன ?

**பதில் :** சுயாதீனமான இராச்சியமாக பிறிதொரு வெளியக தரப்புடன் நிதி விவகாரங்களில் தொடர்பினை பேணும் போது அவற்றை தொடர வேண்டும். சர்வதேச நாணய நிதியம் முன்வைத்துள்ள சகல நிபந்தனைகளுக்கும் அடிபணிய வேண்டிய தேவை கிடையாது.

நாணய நிதியத்துடன் மீண்டும் பேச்சுவார்த்தையில் ஈடுபட வேண்டும். தேசிய மட்டத்தில் நிதி பாய்ச்சலை அதிகரித்துக்கொள்ளாமல் பொருளாதார நெருக்கடிக்கு தீர்வுகாண முடியாது. கடன் முகாமைத்துவத்தை கணக்காளருக்கு வழங்கி விட்டு நிதி திரட்டல் குறித்து நடைமுறைக்கு சாத்திமயமான திட்டங்களை செயற்படுத்த வேண்டும்.

கடன் செலுத்தலுக்கு தற்காலிக இடைவேளை கிடைத்துள்ளது. நிர்வாகத்துக்கு தேவையான நிதியை திரட்டிக் கொண்டு உரிய காலத்தில் கடனை செலுத்தாவிடின் பொருளாதார நெருக்கடி மென்மேலும் தீவிரமடையும்.

**கேள்வி :** யுத்தம் முடிவடைந்து இன நல்லிணக்கம் இன்று வரை உறுதிப்படுத்தப்படவில்லை. தேசிய நல்லிணக்கத்தை ஸ்தாபிக்க உங்களிடமுள்ள திட்டங்கள் என்ன ?

**பதில் :** யுத்தத்தால் பாதிக்கப்பட்ட அனைவருக்கும் நியாயத்தை பெற்றுக் கொடுப்பதற்கு தேசிய மூலோபாய திட்டத்தில் 'ஒன்றிணைந்த தேசியம்' என்ற கருத்திட்டத்தின் கீழ் யோசனைகளை முன்வைத்துள்ளோம். இனம், மதம், மற்றும் குலத்தை முன்னிலைப்படுத்தி எவரும் வேறுப்படுத்தப்படலாகாது என்பதில் உறுதியாக உள்ளேன்.

தேசியத்தை பற்றி பேசும் போது அது அரசியல் மேடைகளில் இனவாதமாக பார்க்கப்படுகிறது. மக்களை பிளவுப்படுத்தும் சட்டங்களுக்கு நாட்டு மக்கள் ஒருபோதும் இணக்கம் தெரிவிக்க மாட்டார்கள் என்பதை உறுதியாக குறிப்பிட முடியும்.

**கேள்வி :** அதிகார பகிர்வு தொடர்பில் உங்களின் நிலைப்பாடு என்ன ?

**பதில் :** அதிகார பகிர்வு மற்றும் அதிகார பகிர்வின் கட்டமைப்பு தொடர்பில் இதுவரை எவ்விதகருத்துக்க ணிப்பும் மேற்கொள்ளப்படவில்லை. அரசியல்வாதிகள் ஒருசிலர் ஒன்றிணைந்து அதிகார பகிர்வு தொடர்பில் தீர்மானம் எடுப்பது நியாயமற்றது. யாருக்கு அதிகார பகிர்வு அவசியம் என்பதை மக்களிடம் கேட்க வேண்டும். அதற்கு சர்வஜன வாக்கெடுப்புக்கு செல்லவேண்டும். அதிகார பகிர்வு பற்றி பேசும் அரசியல்வாதிகள் தங்களை வளப்படுத்திக் கொள்ளவே முயற்சிக்கிறார்கள். மக்களுக்கு ஏதும் கிடையாது.

**கேள்வி :** அதிகார பகிர்வுக்கு நீங்கள் தனிப்பட்ட முறையில் எதிர்ப்பில்லை. மக்களிடம் கோர வேண்டும் என்று கேட்கின்றீர்களா ?

**பதில் :** எமக்கு தெரியாது. ஜனநாயக ஆட்சி முறைமை என்றால் மக்களிடம் கேட்க வேண்டும். மக்களின் தீர்மானத்துக்கு அமையவே செயற்பட வேண்டும். அரசியல்வாதிகள் குறுகிய நோக்கங்களுக்காக அதிகார பகிர்வை பயன்படுத்துவார்களாயின் தேசியத்துக்காக அதனை தோற்கடிக்க வேண்டும்.

**கேள்வி :** ஊழல் ஒழிப்பு வெளிப் படைத்தன்மை உள்ளிட்ட விடயங்கள் ஊடாகவே நல்லாட்சியை ஸ்தாபிக்க முடியும். இது குறித்து உங்களின் நிலைப்பாடு என்ன ?

**பதில்:** தேர்தல் காலத்தில் மாத்திரமே ஊழல் மற்றும் வெளிப்படைத்தன்மை பற்றி பேசப்படும். அரச மற்றும் தனியார் நிதி கொடுக்கல் வாங்கல்களை டிஜிற்றல் முறைமைப்படுத்தினால் ஊழலை ஒழிக்க முடியும். சட்டத்தை இயற்றி விட்டால் மாத்திரம் ஊழல் ஒழியாது. – என்றார்.(05)

# சஜித்துக்கு தமிழ் அரசின் நிபந்தனையற்ற ஆதரவு தமிழர்களுக்கு இழைக்கப்பட்ட பெரும் துரோகம்

## சுமந்திரனை கடிந்த அங்கஜன் இராமநாதன்



நாடாளுமன்ற உறுப்பினர்களான ரிஷாத் பதியுதீன், ரவூப் ஹக்கீம் ஆகியோர் நிபந்தனைகளின் அடிப்படையில் எதிர்க்கட்சித் தலைவருக்கு ஆதரவு வழங்குவதாக குறிப்பிட்டுள்ளார்கள். ஆனால் இலங்கைதமிழரசுக்கட்சியின் உறுப்பினர் சுமந்திரன் எவ்விதமான நிபந்தனைகளுமில்லாமல் எதிர்க்கட்சித் தலைவருக்கு ஆதரவு வழங்கியுள்ளார். இது தமிழ் மக்களுக்கு இழைத்துள்ள துரோகமல்லவா, வடக்கு மற்றும் கிழக்கு மக்களின் வாக்குகளை சிதறடிக்கும் சூழ்ச்சிகளுக்கு தமிழ் மக்கள் அகப்பட கூடாது. செய்ந்நன்றி மறவாமல், ஜனாதிபதிக்கு மீண்டும் ஆணையளிக்க வேண்டும் என யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம்–உடுப்பிட்டி பகுதியில் சனிக்கிழமை இடம்பெற்ற சுயேச்சை ஜனாதிபதி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவின் 'இயலும் ஸ்ரீ லங்கா' தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு –

இது தேர்தல் பிரசாரக் கூட்டமல்ல, ஜனாதிபதிக்கு யாழ் மாவட்டத்தில் தேர்தல் பிரசாரக் கூட்டத்தை நடத்த வேண்டிய தேவை கிடையாது. நன்றிக்கான கூட்டம். பொருளாதார நெருக்கடியில் இருந்து மீண்டு நிம்மதியாக வாழ்வதற்கு நம்பிக்கையளித்துள்ளார்.

ஜனாதிபதியின் வெற்றிக்கான கூட்டமாகவே இதனை கருத வேண்டும். தற்போதைய முன்னேற்றத்தை மென்மேலும் உறுதிப்படுத்த வேண்டுமாயின் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வெற்றிப் பெற வேண்டும். இல்லையேல் நாடு மீண்டும் பின்னடையும்.

வடக்கு மற்றும் கிழக்கு மக்கள் சிறந்த தீர்மானத்தை எடுத்துள்ளார்கள். தமது அபிலாசைகளை வென்றெடுப்பதற்கு தமிழ் மக்கள் ரணில் விக்கிரமசிங்கவுக்கு பலதடவைகள் ஆதரவளித்துள்ளார்கள். ஜனாதிபதிக்கு ஆதரவு வழங்கும் முதல் மேடை இதுவென்பதை குறிப்பிட்டுக் கொள்ள வேண்டும்.

நெருக்கடியான சந்தர்ப்பத்தில் அரசாங்கத்தை பொறுப்பேற்றாமல் தலைவர்கள் இருந்த போது மக்களுக்காக சவால்களை பொறுப்பேற்பேன் என்று ஜனாதிபதி குறிப்பிட்டார். இரண்டு வருடங்களில் நாட்டை வழமைக்கு கொண்டு வந்துள்ளார். நாங்கள் சந்தர்ப்பவாதிகளல்ல, நன்றியுள்ளவர்கள்.

நெருக்கடியான சந்தர்ப்பத்தில் ஜனாதிபதி அரசாங்கத்தை பொறுப்பேற்றாமல் இருந்திருந்தால் இலங்கை சோமாலியாவை போன்று மாறியிருக்கும். பொருளாதார மீட்சிக்கு சிறந்த தீர்மானங்கள் எடுக்கப்பட்டு, அவை நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. எழுச்சிப் பெறுவதா? அல்லது வீழ்ச்சியடைவதா ? என்பதை செப்டெம்பர் 21 திகதி தீர்மானிக்க வேண்டும்.

வடக்கு மற்றும் கிழக்கு மக்களின் வாக்குகளை சிதறடிக்கும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகிறது. இலங்கை தமிழரசுக் கட்சி வேடிக்கையான நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளது. தமிழரசு கட்சியின் ஒரு தரப்பினர் தமிழ் பொது வேட்பாளருக்கு ஆதரவு வழங்கியுள்ள நிலையில்.

நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் விரைவாக சென்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவு வழங்குவதாக அறிவித்துள்ளார். ஜனாதிபதியை என்னுடைய அலுவலகத்துக்கு அழைத்து தமிழ் மக்களின் நீண்டகால கோரிக்கைகளை எழுத்துமூலமாக அவரிடம் வழங்கினேன். இதனை ஏற்றுக் கொண்டதன் பின்னரே நான் அவருக்கு ஆதரவு வழங்கினேன்.

நாடாளுமன்ற உறுப்பினர்களான ரிஷாத் பதியுதீன், ரவூப் ஹக்கீம் ஆகியோர் நிபந்தனைகளின் அடிப்படையில் எதிர்க்கட்சித் தலைவருக்கு ஆதரவு வழங்குவதாக குறிப்பிட்டுள்ளார்கள். ஆனால் இலங்கைதமிழரசுக்கட்சியின் உறுப்பினர் சுமந்திரன் எவ்விதமான நிபந்தனைகளுமில்லாமல் எதிர்க்கட்சித் தலைவருக்கு ஆதரவு வழங்கியுள்ளார். இது தமிழ் மக்களுக்கு இழைத்துள்ள துரோகம்.

தமிழ் மக்களின் வாக்குகள் எம்மிடம் என்ற மாயையில் இருந்துக் கொண்டு செயற்படும் இவர்கள் தமிழர்களை நெருக்கடிக்குள்ளாக்கும் செயற்பாடுகளில் ஈடுபடுகிறார்கள். தமிழர்கள் இந்த சூழ்ச்சியில் அகப்பட மாட்டார்கள். யார் உண்மையானவர்கள் என்பதை தமிழர்கள் நன்கு அறிவார்கள்.

ஜனாதிபதியை இனவாதி என்று குறிப்பிடுகிறார்கள். நல்லாட்சியில் அவர் தமிழர்களுக்கு செய்த அபிவிருத்திகளை மக்கள் நன்கு அறிவார்கள். வடக்கில் இடைநிறுத்தப்பட்டுள்ள அபிவிருத்தி பணிகளை மீண்டும் தொடர்வோம். – என்றார்.(05)

# அநுரவுக்கு உடல்நலம் பாதிப்பு ஓய்வெடுக்குமாறு ஆலோசனை

ஜனாதிபதி தேர்தல் பிரசாரத்தில் தீவிரமாக ஈடுபட்டுள்ள தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அனுரகுமாரதிசநாயக்க உடல்களைப்பு காரணமாக காய்ச்சலால் பாதிக்கப்பட்டுள்ளதால் மருத்துவர்கள் அவரை ஓய்வெடுக்குமாறு கேட்டுக்கொண்டுள்ளனர் என ஜேவிபியின் பொதுச்செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

உடல்நிலை சரியில்லாததால் மாத்தறையில் இடம்பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் அனுரகுமாரதிசநாயக்க கலந்துகொள்ளவில்லை என ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

அனுரகுமார உடல்நிலை பாதிக்கப்பட்டுள்ளார், கடந்த சில நாள்களாக அவர் ஓய்வின்றி பிரச்சாரத்தில் ஈடுபட்டார், அவர் காய்ச்சலால் பாதிக்கப்பட்டுள்ளார். இதன்காரணமாக மருத்துவர்கள் அவரை ஓய்வெடுக்குமாறு கேட்டுக் கொண்டுள்ளனர் என ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.(05)

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## உடன் நிறுத்தவேண்டும்

அரசுத் தலைவராக இருந்தபடியே இந்தத் தேர்தலில் போட்டியிடும் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவாக அரச வளங்கள் முறைகேடாகப் பயன்படுத்தப்படுகின்றன என்ற இலங்கையின் உள்ளூர் தேர்தல் கண்காணிப்பாளர்கள் தெரிவிக்கின்றனர். அது குறித்த கவலைகளை எழுப்பியிருந்த அவர்கள், அத்தகைய மீறல்களை நிறுத்தவும் 'தேர்தலின் நேர்மையை நிலைநாட்டவும்' 'தீர்மானமான நடவடிக்கையை' எடுக்குமாறு தேர்தல் ஆணைக்குழுவிடம் வலியுறுத்தியும் இருந்தனர். எனினும் அது தொடர்பில் காத்திரமான நடவடிக்கைகள் எவையும் எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை.

ரணில் விக்கிரமசிங்க எதிர்வரும் தேர்தலில் ஒரு பரந்த கூட்டணியில் சுயேச்சை வேட்பாளராக போட்டியிடும் அதேநேரம், பெரும்பாலான அரச நிறுவனங்களின் கட்டுப்பாட்டை தற்போதைய ஆளும் கட்சி கொண்டுள்ளது.

ட்ரான்ஸ்பரன்சி இன்டர்நேஷனலின் உள்ளூர் பிரிவான டிரான்ஸ்பரன்சி இன்டர்நேஷனல் ஸ்ரீலங்கா (TISL), ஆளும் தரப்புக்குச் சொந்தமான இலங்கை போக்குவரத்து சபை (SLTB) மற்றும் இலங்கை விமானப்படை உட்பட அரச வாகனங்கள் தேர்தல் பரப்புரைக்குப் பயன்படுத்தப்பட்ட ஆபத்தான நிகழ்வுகளை அடையாளம் கண்டுள்ளதாக தெரிவித்துள்ளது.

மட்டுப்படுத்தப்பட்ட அரசியல் உரிமைகளை மட்டுமே கொண்ட நிர்வாக சேவை போன்ற மூத்த பிரிவுகளில் உள்ளவர்கள் உட்பட பொது அதிகாரிகள் அரசியல் கட்சிகளுக்காக நேரிலும் சமூக ஊடகங்களிலும் தீவிரமாக பரப்புரை செய்கின்றனர் எனவும் அறிக்கைகள் வெளிவந்துள்ளன.

தேர்தல் ஆணையம் (EC) மற்றும் அந்தந்த அரசு நிறுவனங்களின் தலைவர்களிடம் இது தொடர்பான முறைப்பாடுகள் அளிக்கப்பட்டுள்ளது, இது போன்ற அதிகாரிகளை தேர்தல் பணிகளுக்கு அனுப்புவதை மறுபரிசீலனை செய்யவேண்டும் என்று அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

'விவசாயிகளுக்கான பயிர்க்கடனை தள்ளுபடி செய்வது மற்றும் பாடசாலை அபிவிருத்தி உத்தியோகத்தர்களை ஆசிரியர் சேவையில் இணைத்துக்கொள்வது தொடர்பான அண்மைய தீர்மானங்கள் கவலையளிக்கின்றன' என ட்ரான்பரன்ஸி இன்டர்நாஷனல் நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் நடிஷானி பெரேரா வெள்ளிக்கிழமை கொழும்பில் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

'மக்களுக்குச் சென்றடையும் நன்மைகளை நாங்கள் ஆதரிக்கும் அதேவேளையில், சில வேட்பாளர்களுக்குச் சாதகமாக தேர்தல் காலத்தில் அவற்றை அறிவிப்பது, ஒப்படைக்கப்பட்ட அதிகாரத்தை தவறாகப் பயன்படுத்துவதாகும்,' என்று அவர் கூறினார்.

'குடிமக்கள் விழிப்புடன் இருக்கவேண்டும், மேலும் தங்கள் வாக்குகளை ஏமாற்றவோ அல்லது வாங்கவோ அனுமதிக்கக்கூடாது. நாங்கள் சொல்லும் வேட்பாளர்களுக்கு, நீங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டால் நீங்கள் எந்த வகையான தலைவராக இருப்பீர்கள் என்பதை இப்போது உங்கள் செயல்கள் வெளிப்படுத்தும். மக்கள் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.'

முன்னெப்போதும் இல்லாத பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு பொருளாதாரத்தில் இறுக்கமான பிடியைக் கொண்டிருந்த அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, தற்போது தபால் மூல வாக்குகளுக்கு முன்னர் பயிர்க் கடன்களை தள்ளுபடி செய்து அரச ஊழியர்களின் சம்பள உயர்வுக்கும் உறுதியளித்துள்ளார்.

'கௌரவத்துடன் வாழ்வதற்கும், உரிமைகள் மற்றும் சுதந்திரங்களை அனுபவிப்பதற்கும், பொருளாதார ஸ்திரத்தன்மையை உறுதிப்படுத்துவதற்கும், அவர்களின் எதிர்காலத்தைப் பாதுகாப்பதற்குமான குடிமக்களின் திறன் அனைத்தும் சுதந்திரமான மற்றும் நியாயமான தேர்தலைச் சார்ந்தது' என்று பெரேரா கூறினார்.

அரசுத் தலைவரின் இந்தச் செயற்பாட்டால் பல முரண்பாடுகள் ஏற்பட்டுள்ளதாக தேர்தல் வன்முறைகளை கண்காணிக்கும் மையத்தின் (CMEV) பிரதம செயற்பாட்டு அதிகாரி பேராசிரியர் அர்ஜுன பராக்கிரம தெரிவித்துள்ளார்.

கடந்த மாதம் உச்ச நீதிமன்ற தீர்ப்புக்கு முன்னர் அவர்கள் கையாண்ட அதே அமைச்சுகளுக்கு முன்னாள் தொழிலாளர் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார மற்றும் சுற்றுலா அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ ஆகியோர் ஆலோசகர்களாக நியமிக்கப்பட்டதையும் அவர் விமர்சித்தார்.

'அவர்கள் இப்போது உத்தியோகபூர்வமற்ற அமைச்சர்களாக செயற்படுகின்றனர் மற்றும் ஜனாதிபதித் தேர்தலுக்காக அரச வளங்களை துஸ்பிரயோகம் செய்கிறார்கள்,' என அவர் தெரிவித்தார்.

இப்படி ஜனநாயகத்தின் அடிப்படையையே கேலிக்கூத்தாக்கும் ஒருவர் தேர்தலில் வெற்றிபெற்று நேர்மையான அரசியல் செய்வார், மக்களின் பிரச்சினைகளை நியாயமாகத் தீர்ப்பார் என்று எப்படி நம்புவது? தனது பதவி நிலையால் கிடைக்கக்கூடிய சாதகத்தைப் முறைகேடாகப் பயன்படுத்தும் இத்தகைய போக்கு ஒருவேளை அரசுத் தலைவருக்கு வெற்றியைப் பெற்றுத்தந்தாலும் தேர்தலின் பின்னர் அதற்கான கடும் எதிர்ப்பை அது எழுப்பும். எனவே இப்படி அரச வளங்களைப் முறைகேடாகப் பயன்படுத்துவதை ஆளும் தரப்பினர் உடனடியாக நிறுத்தவேண்டும்.

# இரண்டாவது லெபனான் போர்?

## ஹிஸ்புல்லா தாக்குதலும் இஸ்ரேல் பதிலடியும்








- ஐங்கரன் விக்கினேஸ்வரா

(ஹிஸ்புல்லா, இஸ்ரேலுடன் போரில் ஈடுபட நினைத்தால் அது இரண்டாவது லெபனான் போராக இருக்கும் என இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு எச்சரிக்கை விடுத்துள்ளார். நாங்கள் போரை விரும்பவில்லை, ஹிஸ்புல்லா விரும்பினால் விளைவுகள் மோசமானதாக இருக்கும் எனவும் தெரிவித்துள்ளார்)

லெபனானில் செயல்பட்டு வரும் ஈரான் ஆதரவு பெற்ற ஹிஸ்புல்லா அமைப்பு, எல்லையில் இஸ்ரேல் ராணுவத்துடன் தொடர்ந்து மோதலில் ஈடுபட்டு வருகிறது.

இஸ்ரேலின் ராணுவ தளங்களை குறிவைத்து, 300க்கும் மேற்பட்ட ராக்கெட், ஏவுகணைகளை ஏவியதுடன் ட்ரோன்களை ஏவி தாக்குதல் நடத்தியது. இதில், தலைநகர் டெல் அவிவ் அருகே உள்ள இஸ்ரேலின் உளவு அமைப்பான மொசாத்தின் தலைமையகமும் குறிவைக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

தற்போது இஸ்ரேல் மற்றும் ஹிஸ்புல்லா இடையிலான மோதல் தீவிரமடைந்துள்ளது. இந்நிலையில், லெபனான் மீதான தாக்குதல் தங்கள் தேசத்தை தற்காத்துக் கொள்வதற்கான உரிமை என இஸ்ரேல் ஜனாதிபதி ஐசக் ஹெர்சோக் தெரிவித்துள்ளார்.

இஸ்ரேலின் ராணுவத்தளங்களைக் குறிவைத்து சுமார் 300-க்கும் மேற்பட்ட கணைகளை ஏவி தாக்குதல் மேற்கொண்டதாக ஹிஸ்புல்லா அமைப்பு ஓகஸ்ட் 25இல் தெரிவித்தது. இஸ்ரேல் தரப்பிலும் லெபனான் மீது தொடர் தாக்குதல் நடத்தப்பட்டது.

நாங்கள் கண்டறிந்த தீவிரவாத அச்சுறுத்தலுக்கு எதிராக தேசத்தையும், மக்களையும் தற்காத்துக் கொள்வதற்கான உரிமை மற்றும் கடமை இஸ்ரேலுக்கு உள்ளது என்றும் லெபனான் மீது தாக்குதல் தொடுத்துள்ளோம் என ஜனாதிபதி ஐசக் ஹெர்சோக் தெரிவித்துள்ளார்.

### தாக்குதலுக்கான காரணம் என்ன?

கடந்த மாதம் ஹிஸ்புல்லா உயர்மட்ட தலைவர் ஃபவத் ஷுக்ர் கொல்லப்பட்டதற்கு பதிலடியாக இஸ்ரேலுக்கு எதிராக ராக்கெட் மற்றும் ட்ரோன் தாக்குதல் தொடுத்துள்ளதாக ஹிஸ்புல்லா தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காசா போர் நிறுத்தம் மற்றும் பணயக்கைதிகள் விடுவிப்பு போன்ற காரணங்களால் தாக்குதலை தாமதப்படுத்தியதாகவும் ஹிஸ்புல்லா தெரிவித்தது. இந்நிலையில், ஹிஸ்புல்லாவின் ட்ரோன் தாக்குதலை இஸ்ரேல் ராணுவம் இடைமறித்ததாக தெரிவித்துள்ளது.

தொடர்ந்து ஹிஸ்புல்லா மீது தீவிர தாக்குதல் நடத்தப்படும் என இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு தெரிவித்துள்ளார்.

### லெபனான் மீது தாக்குதல்:

ஹிஸ்புல்லா அமைப்பு தாக்குதலைத் தொடுப்பதற்கு முன்பாகவே, லெபனான் மீது தாக்குதல் நடத்தப்பட்டதாக இஸ்ரேல் தெரிவித்துள்ளது. இஸ்ரேலுக்கு எதிராக ஹிஸ்புல்லாக்கள் பெரிய அளவில் தாக்குதல் நடத்தத் திட்டமிட்டிருப்பதை நாங்கள் முன்கூட்டியே கண்டறிந்தோம் என இஸ்ரேல் தெரிவித்துள்ளது.

இஸ்ரேலிய மக்கள் மீதான அச்சுறுத்தலை தணிக்கும் விதமாக, இஸ்ரேலிய ராணுவ விமானங்கள் ஹில்புல்லாக்களின் இலக்குகளை நோக்கி நிலைநிறுத்தப்பட்டுள்ளன.

தெற்கு லெபனானில், வடக்கு மற்றும் மத்திய இஸ்ரேல் பகுதிகளை இலக்காக கொண்ட ஹிஸ்புல்லாக்களின் நூற்றுக்கணக்கான ராக்கெட் லாஞ்சர்களை எங்கள் விமானங்கள் தாக்கி அழித்தன என இஸ்ரேல் ராணுவம் தெரிவித்துள்ளது.

இஸ்ரேல் ராணுவம் வெளியிட்டுள்ள அறிக்கையில், சுமார் 100 போர் விமானங்கள், தெற்கு லெபனானில் உள்ள ஹில்புல்லாக்களின் ராக்கெட் லாஞ்சர்களை தாக்கி அழித்தன. இவைகளில் பல வடக்கு இஸ்ரேல் மற்றும் மத்திய இஸ்ரேலை குறிவைத்து இருந்தன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.



### 2வது லெபனான் போர் என இஸ்ரேல் எச்சரிக்கை:

மத்திய கிழக்கு பிராந்தியத்தில் அதிகரித்துள்ள பதற்றத்துக்கு பதில் அளித்துள்ள அமெரிக்கா,

தொடர்ச்சி 5ம் பக்கம்..........

# இரண்டாவது லெபனான் போர்?

4ம் பக்க தொடர்ச்சி...........

இஸ்ரேலின் தற்காப்பு நடவடிக்கைக்கு தொடர்ந்து ஆதரவளிப்பதாகத் தெரிவித்துள்ளது.

காசா போர் தொடங்கியதில் இருந்து இஸ்ரேல் மற்றும் ஹிஸ்புல்லா அமைப்புக்கு இடையேயான இந்த மோதல் தொடர்ந்து வருகிறது. இந்தச் சூழலில் தற்போதைய இந்தத் தாக்குதல் லெபனானில் முழு அளவிலான தாக்குதல் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.





தாங்கள் போரை விரும்பவில்லை, ஆனால் ஹிஸ்புல்லா விரும்பினால் விளைவுகள் மோசமானதாக இருக்கும் என இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

ஒருபுறம் காசா பகுதியில் ஹமாஸ் அமைப்பு நிலைகளை குறிவைத்து இஸ்ரேல் ராணுவம் தாக்குதல் நடத்தி வரும் நிலையில், தெற்கு லெபனானில் சரமாரியாக ஏவுகணை தாக்குதல் நடத்திவருவதாக இஸ்ரேல் ராணுவம் தெரிவித்துள்ளது.

இஸ்ரேல் - ஹமாஸ் இடையிலான போர் நடந்து வரும் நிலையில், கடந்த நாட்களில் தெற்கு லெபனானின் பல பகுதிகளில் உட்புகுந்து தாக்குதல் நடத்தியுள்ளதாக இஸ்ரேல் விமானப்படை தெரிவித்துள்ளது. ஹமாஸ் அமைப்பினர் போல் இல்லாமல் ஹிஸ்புல்லா போராளிகள் கடுமையான எதிர் தாக்குதல் நடத்தி வருவதாக கூறப்படுகிறது.

**ஹிஸ்புல்லா - கடவுளின் கட்சி:**

ஹிஸ்புல்லா என்றால் அரபு மொழியில் கடவுளின் கட்சி என்று பொருள். 1980களில் கிடைத்த எண்ணெய் வளம், மேற்கத்திய நாடுகளின் பார்வையை மத்திய கிழக்கு வளைகுடா பிராந்தியத்தை நோக்கி திரும்பியது.

அப்போது ஈராக், சிரியா, ஜோர்டான், லெபனான் உள்ளிட்ட பகுதிகளில் ஹிஸ்புல்லா அமைப்பு தோன்றியது. சிரியா மற்றும் ஈராக்கில் துணை ராணுவ குழுக்கள் மூலம் பயிற்சி மேற்கொண்ட ஹிஸ்புல்லா அமைப்பினர், ஈரானின் நேச நாட்டு போராளிகள் அமைப்புடன் நெருக்கமாக இருந்தனர்.

லெபனான் அரசியலில் கடந்த 30 வருடங்களாக தலையிட்டு வரும் ஹிஸ்புல்லா அமைப்பினர், கடந்த தேர்தலில் செல்வாக்கு இழந்தனர். இருந்தாலும், தெற்கு லெபனான் பகுதியில் பெரும்பாலான இடங்கள் ஹிஸ்புல்லா அமைப்பினரின் கட்டுப்பாட்டிலேயே உள்ளது.

ஹமாஸ், ஹவுதி, உள்ளிட்ட அமைப்புகளுடன் ஹிஸ்புல்லா நெருக்கமான தொடர்பில் இருந்து வருகிறது. 2006 ஆம் ஆண்டு இஸ்ரேலுக்கும், ஹிஸ்புல்லா அமைப்பினருக்கும் இடையே மோதல் தொடங்கிய நிலையில் கடந்த 15 ஆண்டுகளுக்கும் மேலாக அவ்வப்போது பிரச்சினைகள் எல்லையில் நடந்து வருகின்றன.

இஸ்ரேல் - ஹமாஸ் போர் தொடங்கிய ஒக்டோபர் 7 முதல் ஹிஸ்புல்லா அமைப்பினரும், வடக்கு இஸ்ரேல் பகுதியை நோக்கி தொடர்ச்சியாக ஏவுகணை தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

ஹமாஸ் உடன் காசா பகுதியில் இஸ்ரேல் ராணுவம் போரிட்டு வரும் நிலையில் ஹிஸ்புல்லாவுக்கு எதிரான தாக்குதலையும் தீவிரப்படுத்தியுள்ளது. குறிப்பாக, வடக்கு இஸ்ரேலில் உள்ள யூத குடியிருப்புகளை குறிவைத்து தாக்குதல் நடத்த முயற்சி செய்யப்படும் நிலையில், பாதுகாப்பு காரணங்களுக்காக இஸ்ரேல் வடக்கு பகுதியில் உள்ள ஒரு லட்சம் யூதர்களை வேறு பகுதிக்கு இடமாற்றம் செய்துள்ளது.

ஹிஸ்புல்லா, இஸ்ரேலுடன் போரில் ஈடுபட நினைத்தால் அது இரண்டாவது லெபனான் போராக இருக்கும் என இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

பெஞ்சமின் நெதன்யாகுவின் கருத்தால் மத்திய கிழக்கு பிராந்தியத்தில் பதற்றம் மேலும் அதிகரித்துள்ளது. போர் தொடங்கிய நாளில் இருந்து இஸ்ரேல் தொடர்ச்சியாக லெபனான் மீது தாக்குதல் நடத்தி வருவதாகவும், ஐ.நா தலையிட்டு அப்பாவி மக்கள் இறப்பதை தடுக்க வேண்டும் என்றும் லெபனான் வெளியுறவுத்துறை தெரிவித்துள்ளது.



காலைக்கதிர்
Kalaikkathir

# ஜனாதிபதியின் மட்டு. பரப்புரைக் கூட்டத்தில் துப்பாக்கி ரவையுடன் இளைஞர் கைதானார்

மட்டக்களப்பு கிரான் கோரகல்லிமடுவில் ஞாயிற்றுக்கிழமைஏற்பாடுசெய்யப்பட்டதேர்தல்பிரசாரக் கூட்டத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வருகை தரவிருந்தவேளையில் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த பொலிஸார் இளைஞர் ஒருவரை துப்பாக்கி ரவையுடன் கைதுசெய்துள்ளதாக சந்திவெளி பொலிஸார் தெரிவித்தனர்.

வாகரை அம்பந்தனாவெளியைச் சேர்ந்த 22 வயது கடற்றொழிலாளர் ஒருவரே கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த இளைஞர் மேலதிக விசாரணைக்காக பொலிஸாரால் அழைத்துச் செல்லப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு தெரிவித்து இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரனால் தேர்தல் பிரசாரக் கூட்டம் கிரான் கோரகல்லிமடு விளையாட்டு மைதானத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் பங்குபற்றுவதற்காக பொதுமக்கள் பலர் வாகனங்களில் மாவட்டத்தின் பல்வேறு இடங்களில் இருந்தும் கட்சி ஆதரவாளர்களால் அழைத்துச் செல்லப்பட்டிருந்தனர்.

இந்த இளைஞரும் வாகரை பிரதேசத்திலிருந்து அழைத்துச் செல்லப்பட்ட ஒருவரே ஆவார்.

இந்நிலையில் ஜனாதிபதி தேர்தல் பிரசாரக் கூட்டம் எவ்வித குழப்பமின்றி சற்று தாமதித்து நடைபெற்றது.(05)



# சஜித்துடன் எந்த விதமான ரகசிய ஒப்பந்தமுமில்லை

## சுமந்திரன் வெளிப்படைப் பேச்சு

சஜித் பிரேமதாசவுடன் எந்தவிதமான இரகசியமான ஒப்பந்தங்களையும் செய்யவில்லை என்று இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

சஜித் பிரேமதாஸவை இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி ஆதரிக்கும் நிலைப்பாட்டை எடுத்தபோது உடன்பாடுகள் ஏதும் செய்யப்பட்டதா? அவ்வாறு செய்யப்படாமைக்கான காரணங்கள் என்ன என்று வினவியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி தென்னிலங்கை வேட்பாளர்களுடன் எந்தவிதமான எழுத்துமூலமான உடன்பாடுகளையும் இதுகாலவரையில் மேற்கொண்டதில்லை. அந்த வகையில் எமது நிலைப்பாடானது ஜனாதிபதி வேட்பாளர்கள் அதிகாரப்பகிர்வு உள்ளிட்ட தமிழர்களின் விடயங்கள் தொடர்பில் பகிரங்கமாக தங்களது தேர்தல் விஞ்ஞாபனத்தில் அறிவிக்க வேண்டும் என்பதே ஆகும்.

எம்மைப் பொறுத்தவரையில் தமிழ் மக்களுடன் உடன்பாடுகளை எட்டுவது வாக்குறுதிகளை அளிப்பது போன்ற செயற்பாடுகளை தவிரவும் தங்களுடைய விஞ்ஞாபனங்களில் குறிப்பிட்டு ஒட்டுமொத்தமான நாட்டுக்கும் கூற வேண்டும் என்பதே முக்கியமானது.

அந்த வகையில் சஜித் பிரேமதாஸ தனது நிலைப்பாட்டை தனது தேர்தல் விஞ்ஞாபனத்தின் ஊடாக வெளிப்படுத்தியுள்ளார். அதற்கு அமைவாகவே நாம் சஜித்தை ஆதரிக்கும் முடிவை எடுத்தோம். – என்றார்.(05)

# ஜனாதிபதி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவை ஆதரித்து கல்முனையில் துண்டுப்பிரசுரம் பகிர்வு





(பாறுக் ஷிஹான்)

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஆதரித்துகல்முனைமாநகரில்பிரசாரநடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் முன்னாள் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் பேராசிரியர் முருகேசு ராஜேஸ்வரன் தலைமையில் குறித்த நடவடிக்கை சனிக்கிழமை இடம்பெற்றது.

இதன்போது நற்பிட்டிமுனை,பாண்டிருப்புசந்திகள், கல்முனை சந்தை நகர வர்த்தக நிலையங்களுக்கு சென்ற தமிழ் தேசிய கூட்டமைப்பின் முன்னாள் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் பேராசிரியர் முருகேசு ராஜேஸ்வரன், ரணில் விக்கிரமசிங்கவிற்கு ஆதரவினை வழங்குமாறு பொதுமக்கள் வர்த்தகர்களிடம் வேண்டுகோள் விடுத்தார்.

இதேவேளை குறித்த நடவடிக்கை நாடளாவிய ரீதியில் ஆரம்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது(05)



# தேர்தல் காலத்தில் அடிப்படை உரிமைமீறினால் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்ய முடியும்

## மனித உரிமைகள் ஆணைக்குழு அறிவிப்பு




(பாறுக் ஷிஹான்)

தேர்தல் காலத்தின் போது, தேர்தல் சட்டங்கள், நாட்டின் ஏனைய சட்டங்கள், நாட்டின் அரசியல் அமைப்பிற்கு இணங்க அந்தத் தேர்தல் நடத்தப்படுவதை உறுதி செய்வதற்கு அரச உத்தியோகத்தர்கள் கடமைப்பட்டுள்ளனர். இது ஒவ்வொரு விடயத்திற்குப் பொறுப்பான அரச உத்தியோகத்தர்கள் அந்தச் சட்டங்களுக்கமைவாக தங்களது கடமைகளை நியாயமானதாகவும் பக்கச்சார்பின்றியும் செய்வதை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

1978 ஆம் ஆண்டின் அரசமைப்பு யாப்பின்படி, மக்களுக்கு வாக்களிக்கும் உரிமை, சுதந்திரமாக அரசியலில் ஈடுபடும் உரிமை, சுதந்திரமான மற்றும் நியாயமான தேர்தலுக்கான உரிமைகளுடன் சட்டத்திற்கு முன் யாவரும் சமம் என்பதையும் உறுதிப்படுத்தியுள்ளது.

ஒவ்வொரு அரச உத்தியோகத்தர்களும் அரசமைப்பிற்கு அமைவாக செயற்படுவதற்கு உறுதிமொழி செய்துள்ளனர். அரச உத்தியோகத்தர்கள் கொண்டுள்ள சட்ட ரீதியான கடமைகளையும், பொறுப்புக்களையும் தவறாகப் பயன்படுத்துதல் அல்லது நடவடிக்கை மேற்கொள்ளாமல் விடல் பக்கச்சார்பாக செயற்படல் அரசமைப்பு யாப்பின் அடிப்படை உரிமையை மீறும் செயலாகும்.

அவ்வாறு மீறுகின்ற சந்தர்ப்பத்தில் அவர்களுக்கு எதிராக 1996 ஆம் ஆண்டின் 21ஆம் இலக்க இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு புலனாய்வுகள் மற்றும் விசாரணைகளை நடத்துவதற்கு மற்றும் அவர்கள் தொடர்பாக நடவடிக்கை எடுப்பதற்கு ஆணைக்குழுவிற்கு அதிகாரம் உண்டு.

இந்த அடிப்படையில் எமது பிராந்தியத்தில் தேர்தல் நடைபெறுவதற்கு முன், தேர்தல் தினத்தன்று அல்லது தேர்தலின் பின்னர் அரச, நிருவாக, நிறைவேற்றுத் துறையினர் அடிப்படை உரிமையை மீறியதற்கான அல்லது மீறப்படுவதற்கான ஏதுக்கள் இருக்குமாக இருந்தால் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கல்முனை அலுவலகத்திற்கு முறைப்பாடு செய்ய முடியும் என இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கல்முனை பிராந்திய இணைப்பாளர் அப்துல் அஸீஸ் தெரிவித்தார்.(05)

# இந்தியாவின் 'தரங் சக்தி' பயிற்சியில் இலங்கை விமானப்படை பீச்கிராஃப்ட் விமானம் பங்கேற்பு

இலங்கை விமானப்படைக்கு சொந்தமான பீச்கிராஃப்ட் விமானம் இந்திய விமானப் படையால் ஏற்பாடு செய்யப் பட்ட 'தரங் சக்தி' வான் போர் பயிற்சியில் இணைந்தது. மேலும் இந்த பயிற்சியில் 11 நாடுகளைச் சேர்ந்த சுமார் 150 விமானங்கள் பங்கேற்றன.

'தரங் சக்தி 'விமானப் போர் பயிற்சியின் முதல் கட்டம் 2024 ஆகஸ்ட் 06 முதல் 14 ஆம் திகதி வரை இந்தியாவின் தமிழ்நாடு, சூலூர் விமானப்படை தளத்தில் வெற்றிகரமாக நடத்தப்பட்டதுடன்.

இரண்டாவது மற்றும் இறுதி கட்ட பயிற்சிகள் 14 செப்ரெம்பர் 2024 அன்று ராஜஸ்தானில் உள்ள ஜோத்பூர் விமானப்படை தளத்தில் நடைபெறவுள்ளது.

இந்த விமான போர் பயிற்சியின் ஒவ்வொரு கட்டத்திலும் இலங்கை விமானப்படையின் பீச்கிராஃப்ட் விமானம் பங்களிப்பை

# 10ஆவது ஜனாதிபதி தேர்தலுக்கு இடையில் நிரந்தர அரசியல் தீர்வுக்கு வழி இருக்கிறது

## வேட்பாளர் அரியநேந்திரன் நம்பிக்கை




பத்தாவது ஜனாதிபதி தேர்தலுக்கு இடையிலே நிரந்தர அரசியல் தீர்வை முன்வைப்பதற்கான ஒரு நடவடிக்கையை அவர்கள் எடுப்பதற்கான வாய்ப்பு இருக்கின்றது என தமிழ் பொது கட்டமைப்பின் ஜனாதிபதி வேட்பாளர் ப.அரியநேந்திரன் தெரிவித்தார்.

வவுனியாவில் பிரசார நடவடிக்கைகளை முன்னெடுத்த நிலையில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அவர் -

இந்த தேர்தலின் ஊடாக தமிழ் பொது வேட்பாளரை நிறுத்தியதன் மூலம் சர்வதேசத்திற்கும் சிங்கள தேசத்திற்கும் அயல் நாடான இந்தியாவுக்கும் ஒரு செய்தியை சொல்ல இருக்கின்றோம். கடந்த 75 ஆண்டுகளாக ஏமாற்றப்பட்ட இனம் இனியும் ஏமாறுவதற்கு தயார் இல்லை என்பதே ஆகும்.

ஒன்பதாவது ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட உள்ள அந்த தென்பகுதியைச் சேர்ந்தவருக்கு தாங்கள் தொடர்ச்சியாக தமிழ் மக்களை ஏமாற்றி இருக்கின்றோம் என்ற மனசாட்சி அவர்களுக்கு உறுத்தும்.

பத்தாவது ஜனாதிபதி தேர்தலுக்கு இடையிலே நிரந்தர அரசியல் தீர்வை முன்வைப்பதற்கான ஒரு நடவடிக்கையை அவர்கள் எடுப்பதற்கான வாய்ப்பு இருக்கின்றது. அதற்கு அப்பால் சிதறி கிடக்கின்ற எமது தமிழ் தேசிய கட்சிகளை ஒரு குடையின் கீழ் கொண்டு வருவதற்கு ஒரு முன்னேற்பாடாகவும் தமிழ் தேசிய பொது கட்டமைப்பு எடுத்து இருக்கின்ற முயற்சி என்பது பயனளிக்கும்.

ஆகவே தமிழ் மக்களாகிய நீங்கள் செய்ய வேண்டிய ஒரே விடயம் கடந்த ஜனாதிபதி தேர்தலிலே பலருக்கு வாக்களித்து இருக்கின்றோம், பேசியிருக்கின்றோம், ஏமாந்தும் இருக்கின்றோம், ஆகவே இம்முறை நாங்கள் கூறுகின்ற விடயம் ஜனாதிபதியாக ஒரு தமிழர் வர முடியாது என்றாலும் கூட எம்மை புறக்கணித்து 13 ஆவது அரசியல் திருத்தத்தை கூட செய்யாது, யுத்த குற்றத்திற்கு சர்வதேச விசாரணை செய்யாமல் உள்ள நிலையில் இந்த தேர்தலில் தமிழ் மக்கள் தமிழ் பொது வேட்பாளருக்கு ஆதரவு வழங்க வேண்டும் எனத் தெரிவித்தார்.

(05-100)



காலைக்கதிர் Kalaikkathir

## வடக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

19ஆவதுதிருத்தத்தின்ஊடாகஅறிமுகப்படுத்திய சிறந்த திட்டங்கள் 20ஆவது திருத்தத்தின் ஊடாக நீக்கப்பட்டன. தேசிய பெறுகை ஆணைக்குழு, கணக்காய்வு ஆணைக்குழு நீக்கப்பட்டது. 21ஆவது திருத்தத்தின் ஊடாக அவற்றை மீண்டும் அமுல்படுத்தினோம்.

ஊழலுக்கு எதிராகவும், சிறந்த அரச நிர்வாகத்துக்கும் தேவையான சட்டங்களை இயற்றியுள்ளோம். சட்டங்களை நடைமுறையில் செயற்படுத்தக்கூடிய சிறந்த தலைவரைத்தான் தெரிவு செய்யவேண்டும்.

2006ஆம்ஆண்டுமுதல்மத்தியவங்கியில் இடம்பெற்றஊழல்மோசடிகளும்தற்போதைய வங்குரோத்துக்கு ஒரு காரணம். நிதி அதிகாரத்தை தவறாக பயன்படுத்தினார்கள். இலங்கைக்குகிடைக்கவேண்டிய58பில்லியன் டொலர் இதுவரை கிடைக்கப் பெறவில்லை என்று சர்வதேச அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. இருப்பினும் மத்திய வங்கி உரிய வகையில் செயற்படவில்லை.

கேள்வி: 30வருடகாலபோரால்பாதிக்கப்பட்ட அனைவருக்கும்நியாயத்தைபெற்றுக்கொடுப்பதற்கும், தேசியநல்லிணக்கத்தைஉறுதிப்படுத்துவதற்கும் முன்னெடுக்கும் நடவடிக்கைகள் என்ன ?

பதில்: போரால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நியாயத்தை பெற்றுக் கொடுக்க பல நடவடிக்கைகளை முன்னெடுத்தோம். காணாமல்போனோர் அலுவலகத்தை அமைத்தோம். காணாமல்போனோர் தொடர்பானமுறைப்பாடுகளைவெகுவிரைவில் நிறைவுசெய்யச்சட்டத்தால்நடவடிக்கைகளை எடுத்துள்ளோம். வடக்கு மற்றும் கிழக்கு மக்களின் அடிப்படை பிரச்சினைகளுக்கு தீர்வினை பெற்றுக்கொடுத்துள்ளேன். நிலையானதீர்வுக்குஉரியநடவடிக்கைகளை செயற்படுத்துவேன்.

## தலிபான் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிறிகொத்தவில் நேற்று செய்தியாளர்களைச் சந்தித்து அவர் இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு தொடர்ந்து தெரிவித்ததாவது:

தேசிய மக்கள் சக்தியின் கொள்கை பிரகடனத்தின் நோக்கமாக இருப்பது, வளமான நாடு அழகான வாழ்க்கையை ஏற்படுத்துவதாகும். ஆனால் இடதுசாரித் தலைவர்கள்அதிகாரத்தில்இருக்கும்எங்காவது வளமானநாடுஅழகானவாழ்க்கைஇருக்கும் நாட்டொன்றை முடியுமானால் இவர்கள் காட்டவேண்டும்.

கியூபாவின் இடதுசாரி கொள்கையுடைய ஆட்சியாளரான பிடல் கஸ்ட்ரோ சிறந்த ஜனநாயகதலைவர். ஆனால்அவருக்குதனது நாட்டை கட்டியெழுப்ப முடியாமல் போனது. கியூபாவை வளமான நாடாக்கவோ அந்நாட்டு மக்களுக்கு அழகான வாழ்கையையை ஏற்படுத்திக்கொடுக்கவோ முடியவில்லை. கியூபாஉலகநாடுகளில்இருந்துதனிமைப்பட்டு, ஒதுக்கப்பட்ட நாடாக மாறியுள்ளது.

அநுரகுமார திசாநாயக்கவும் இடதுசாரி கொள்கையுடைய தலைவர். இரண்டு தடவைகள் ஆயுத முனையில் அதிகாரத்தை பெற்றுக்கொள்ள முயற்சித்தவர். அப்படிப்பட்ட ஒருவர் ஜனநாயக முறையில் அரசியல் கட்சி ஊடாக அதிகாரத்துக்கு வர முயற்சிக்கிறார். அவர்களின் கடந்தகாலம் அனைவருக்கும் தெரியும். நாட்டில்வன்முறையைதோற்றுவித்து பல அழிவுகளை மேற்கொண்டவர்கள். அதனால் அவர்கள் அதிகாரத்துக்கு வந்தால் எவ்வாறான நிலை ஏற்படும் என்பதை மக்கள் சிந்திக்க வேண்டும்.

அதேபோன்று வெனிசுலா நாட்டின் தலைவரும் இடதுசாரி கொள்கையுடையவர். அவரின் ஆட்சியின் கீழ் இருந்து 70 இலட்சம் மக்கள் நாட்டைவிட்டு வெளியேறியுள் ளனர். உலகளிபொருள்உற்பத்தியில்4ஆவதுஇடத்தில் வெனிசுலாஇருக்கிறது. என்றாலும்அவர்களுக்கு பொருளாதாரத்தை முகாமைத்துவம் செய்ய முடியாமல் போயிருக்கிறது. அந்த நாட்டு தலைவருக்கும் வெனிசுலாவை வளமான நாடாக்கவோ அந்நாட்டு மக்களுக்கு அழகான வாழ்கையையை ஏற்படுத்திக்கொடுக்கவோ முடியாமல் போயிருக்கிறது.

ஆசியாவில் வட கொரியாவில் இடதுசாரி கொள்கையுடைய ஆட்சியாளரே இருந்து வருகிறார். அங்கு தனி ஆட்சியே இடம்பெறுகிறது. ஜனநாயகம் இல்லை. அந்த நாட்டில் என்ன நடக்கிறது என்று யாருக்கும் ஒன்றும் தெரியாது. அந்த நாடும் உலகில் ஏனைய நாடுகளில் இருந்து ஒதுக்கப்பட்டு, சர்வதேச நாடுகளுடன் எந்த தொடர்பும் இல்லாத நாடாகவே இருந்து வருகிறது. அதேபோன்று சீனாவில் இடதுசாரி கொள்கையுடைய கம்யூனிஸ்ட் கட்சிமாத்திரமேஇருக்கிறது. வேறு கட்சிகள் அங்கு இல்லை. அந்த நாடு வளமான நாடு. ஆனால் அந்த நாட்டில் ஜனநாயகம், சுதந்திரம் இல்லை. ஊடக, கலாசார சுதந்திரம் மட்டுப்படுத்தப்பட்ட நாடாகும்.

அதனால் இடதுசாரி கொள்கையுடைய தலைவர்கள் அதிகாரத்தில் இருக்கும் எந்த நாடும் அனுரகுமார ஏற்படுத்தப்போகும், வளத்தோடு இல்லை. அந்த மக்களுக்கு அழகான வாழ்க்கையும் இல்லை. அதேநேரம் அடிப்படைவாத கொள்கையுடை தலிபான் ஆட்சியை போன்ற ஆட்சிக்கே அனுரகுமார முயற்சிக்கிறார். அந்த நிலைக்கு எமது நாட்டை கொண்டு செல்ல மக்கள் இடமளிக்கப்போவதில்லை என்றார்.

## மலையக ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சஜித் பிரேமதாசவை ஆதரித்துள்ளோம் என்று தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவரும், கொழும்புமாவட்டநாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் கூட்டணியின் சார்பில், ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும், எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவை ஆதரித்து, நுவரெலியா – தலவாக்கலையில் நேற்று பரப்புரைக் கூட்டம் நடைபெற்றபோது அதில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

நல்லாட்சிக்காலத்தில்கூடநாம்போராடியே உரிமைகளை வென்றோம். எனினும், நாம் விரும்பும் ஆட்சியாக சஜித் ஆட்சி அமையவுள்ளது. அந்த ஆட்சியில் தமிழ் முற்போக்குக் கூட்டணி பலமான பங்காளிக் கட்சியாக இருக்கும். நாட்டில் எல்லா மாவட்டங்களிலும் எமது கூட்டணியே முன்னிலையில் இருக்கின்றது. எனவே, ஜனாதிபதி தேர்தலில் சஜித் பிரேமதாச வெற்றிபெறுவது உறுதி.

எமது மக்களுக்கு காணி உரிமை வழங்கப்படும். நாள்கூலி முறைமை ஒழிக்கப்படும். சமத்துவம் உள்ள மக்களாக நாம் வாழும் நிலை உருவாகும். இது விடயத்தில் நாம் மிகவும் அவதானத்துடன் செயற்படுகின்றோம்.

நாம் சலுகைகளுக்காக அல்ல, எமது மக்களின் அபிலாஷைகளை வென்றெடுப்பதற்காகவே நாம் சஜித் பிரேமதாசவுக்கு ஆதரவளித்துள்ளோம். எமது மக்கள் தேசிய நீரோட்டத்தில் இணைக்கப்படுவார்கள். சம உரிமைபெற்றவர்களாகவாழ்வார்கள். காணி உரிமை நிச்சயம் வழங்கப்படும் – என்றார்.

## 5 பேர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சென்று துண்டு பிரசுரங்களை விநியோகிக்க முடியும் என அவர் குறிப்பிட்டார்.

அதன்படி, தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் மட்டுமே தமது வாகனங்களில் ஸ்டிக்கர்களை ஒட்ட முடியும் என்று அவர் தெரிவித்தார்.

மேலும், சம்பந்தப்பட்ட வேட்பாளரின் வாகனத்தை தவிர ஏனைய அனைத்து வாகனங்களிலும் ஸ்டிக்கர் அல்லது வேறு பரப்புரைகளை காட்சிப்படுத்துவது சட்டவிரோதமானது என்றும் தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் குறிப்பிட்டார்.

## வட்டியில்லா....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

20 வரை சமர்ப்பிக்க முடியும் என கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

இந்த ஆண்டு அதிகபட்சமாக பதினைந்து இலட்சம் ரூபா வரை ஐந்து பிரிவுகளின் கீழ் கடன் பெறலாம் என்றும் பதினெட்டு உயர் கல்வி நிறுவனங்களில் பட்டப் படிப்புகளுக்கு மாணவர்கள் விண்ணப்பிக்கலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ரணிலுடன்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெலிமடையில் நேற்று இடம்பெற்ற 'இயலும் ஸ்ரீலங்கா' பேரணியில் இணைந்துகொண்டார்.

ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து பிரிந்து சென்று ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்து செயற்பட்டதற்காக கவலை தெரிவித்து அவர் அண்மையில் தனது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியையும் ராஜினாமா செய்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் செயலாளரும் மறைந்த அமைச்சருமான காமினி அத்துகோரளவின் சகோதரியுமான சட்டத்தரணி தலதா அத்துகோரள இரத்தினபுரி மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி நாடாளுமன்ற உறுப்பினராவார்.

## சிலிண்டருக்கு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொருட்களுக்கான வரிசைகள் நீண்டு கிடந்தன. தொழில் இன்றி மக்கள் அல்லல்பட்டனர். வீடுகளில் முடங்கினோம். எதிர்காலம் கேள்விக் குறியாக தெரிந்தது. இவற்றை நிவர்த்திக்க மக்களுக்காக ஆட்சியை ஏற்றுக்கொண்டேன்.

அதன் பின்னர் கடினமான முடிவுகளை எடுக்க வேண்டியிருந்தது. இதிலிருந்து மீள்வதற்கு சர்வதேச நாணயநிதியத்திற்குச் செல்ல வேண்டியிருந்தது. அவர்களின் நிபந்தனைகளுக்கு அமைய எவ்வாறு செயற்பட வேண்டுமெனவும் முன்கூட்டியே அறிந்திருந்தேன். அவர்கள் மேலும் இலங்கைக்கு கடன் தரவும் தயாராக இருக்கவில்லை.

கடன்பெறவோ, பணம் அச்சிடவோ முடியாது என்று வலியுறுத்தினர். கைகளையும் கால்களையும் கட்டிப்போட்டிருந்தனர். ஆளும்தரப்பிடம் பணம் இருக்கவில்லை. இறுதியாக வேறு வழியின்றி வரியை அதிகரிக்கும் கடினமாக முடிவை எடுத்தோம். வருமான வரியையும் அதிகரித்தோம். ரூபாவின் பெறுமதி இரட்டிப்பாக அதிகரித்தது. ஆனால் பணம் கிடைக்கவில்லை.

அதற்கு மத்தியிலேயே கஷ்டமான தீர்மானத்தை எடுக்க வேண்டியிருந்தது. ஆனால் அதன் பயனாக நாட்டின் வருமானம்அதிகரித்தது. டொலரின்பெறுமதி குறைந்தது. அத்தியாவசிய பொருட்களின் விலைகள் சடுதியாக குறைந்தன. ஆனால் மக்கள் கஷ்டம் முற்றாக குறையவில்லை. எமது வருமானம் அதிகரிக்கிறது. 2023 ஓரளவு மக்களிடம் பணம் இருந்தது.

அதனை யாருக்கு பகிரலாம் என்று சிந்தித்தேன். அதன்படியே குறைந்த வருமானம் ஈட்டும் மக்களுக்கு 'அஸ்வெசும' வழங்கும் திட்டத்தை செயற்படுத்தினோம். லயன் அறைகளில் வசிக்கும் ஓய்வுபெற்றவர்களுக்கும் அஸ்வெசும நிவாரணம் வழங்கப்படும். எனவே, இவ்வருடத்தில் மேலும் வருமானம் அதிகரிக்கும். தோட்ட தொழிலாளர் சம்பளமும் அதிகரிக்கும்.

அரசஊழியர்களுக்கும்10ஆயிரம்ரூபா வரையில் சம்பளம் அதிகரிக்கும். அடுத்த வருடம் மேலும் அதிகரிக்கும். ரூபாவின் பெறுமதியைப் பலப்படுத்தி விலைகளைக் குறைத்து நிவாரணம் வழங்குவோம்.

நாட்டின் கடன் சுமையைக் குறைப்பதற்கான இணக்கப்பாடுகளை எட்டியுள்ளோம். இப்போது வெளிநாட்டு வங்கிகளுடன் கொடுக்கல் வாங்கல் செய்ய முடியும். ஐஎம்எப் இடமிருந்து நிவாரணங்கள் கிடைக்கின்றன. கடன் வழங்கிய நாடுகள் மீள் செலுத்த சலுகைக் காலத்தை வழங்கியுள்ளன. இந்த ஒப்பந்தங்களைப் பின்பற்றி முன்னோக்கி சென்றால் எமக்கு நல்ல எதிர்காலம் கிடைக்கும்.

எனவே, எனது எதிர்காலத்தை விடுத்து உங்கள் எதிர்காலத்தை தீர்மானியுங்கள். அனுரவும்சஜித்தும்இவற்றைமாற்றுவதாக கூறுகிறார்கள். அதனால் நெருக்க டிகள் மீண்டும் தலையெடுக்கும். இந்நாட் டின் பொருளாதாரத்தை ஏற்றுமதிப் பொருளாதாரமாக மாற்றுவதே இப்போதைய தேவையாகும். அதனால் தன்நிறைவான வருமானத்தை ஈட்டமுடியும்.

பழைய முறைகள் மாற்றப்படவேண்டும். குறிப்பாக தோட்டத் தொழிலாளர் சம்பளத்தை அதிகரிக்கும் முயற்சிகளை முன்னெடுக்கிறோம். லயன் அறை முறைகளை முற்றாக ஒழித்துவிட்டு கிராமங்களாக மாற்றியமைப்போம். காணி உறுதிகளையும் மக்களுக்குத் தருகிறோம். விரும்பியவாறு வீடுகளைக் கட்டிக்கொள்ள முடியும். அதனால் தோட்டங்கள் கிராமங்களாக பரிணமிக்கும்.

மரக்கறி மற்றும் பழ உற்பத்திக்கும் தேவையான வசதிகளை மேம்படுத்தி தருவோம். அதனால் உள்நாட்டு, ஏற்றுமதி உற்பத்திக்கான தேவைகளைப் பூர்த்தி செய்யலாம். சுற்றுலாத்துறையையும் இங்கு பலப்படுத்த வேண்டும். அதனால் புதிய தொழில் வாய்ப்புகள் கிடைக்கும்.

எதிர்காலத்தில்நாட்டைமுன்னேற்றுவோம். டிஜிட்டல்யுகத்தைஉருவாக்குவோம். பெண்களையும் கைவிடவில்லை. அதற்குரிய சட்டங்களை நிறைவேற்றியுள்ளோம். பெண்கள் சிறுவர் பாதுகாப்புக்களை உறுதிப்படுத்துவோம். பெண்களை தொழில் சந்தைக்குள் உள்வாங்குவோம். சிறுவர் பராமரிப்பு நிறுவனங்களை அமைத்து தருவோம்.

இவற்றுக்காகவே எனக்கு வாக்களியுங்கள் என்று கேட்கிறேன். ஹப்புதல மற்றும் தியதலாவ போன்ற நகரங்களின் அபிவிருத்திக்கு வழி செய்வேன். எனவே சிலிண்டருக்கு வாக்களியுங்கள் இல்லாவிட்டால் சிலிண்டரும் இருக்காது கிராமங்களும் இருக்காது – என்றார்.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com



காலைக்கதிர் Kalaikkathir

# தமிழ் பொது வேட்பாளரின் தேர்தல் பரப்புரைக் கூட்டம்

## வவுனியாவில் நடந்தது





தமிழ் பொது வேட்பாளரின் தேர்தல் பிரச்சார கூட்டம் ஞாயிற்றுக்கிழமை வவுனியா கலைமகள் சனசமூக நிலைய மைதானத்தில் நடைபெறறது.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் ஜனாதிபதி வேட்பாளர் அரியநேத்திரன், நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமசந்திரன், ஜனநாயக போராளிகள் கட்சியின் தலைவர் வேந்தன், யாழ். மாநகர சபையின் முன்னாள் மேயர் மணிவண்ணன், முன்னாள் மாகாண விவசாய அமைச்சர் சிவநேசன், தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் அருண் தம்பிமுத்து, அரசியல் ஆய்வாளர்களான நிலாந்தன், ஜதீந்திரா, யோதிலிங்கம், தமிழரசு கட்சியின் மகளிர் அணி தலைவி விமலேஸ்வரி மற்றும் கட்சி ஆதரவாளர்கள், பொதுமக்கள் எனப்பலரும் கலந்து கொண்டுள்ளனர். (05)

# மனைவியை கொன்றுவிட்டு கணவன் தன் உயிர் மாய்ப்பு

## மிஹிந்தலையில் சம்பவம்

மிஹிந்தலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட குந்திக்குளம் பகுதியில் கணவன் தனது மனைவியை கூரிய ஆயுதத்தால் தாக்கி கொலை செய்துவிட்டு, தானும் தற்கொலை செய்துகொண்டுள்ளதாக மிஹிந்தலை பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் சனிக்கிழமை இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்தவர்கள் குந்திக்குளம், மிஹிந்தலை பிரதேசத்தை சேர்ந்த 61 வயதுடைய கணவரும் 56 வயதுடைய மனைவியுமே உயிரிழந்துள்ளதாக மிஹிந்தலை பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

கணவன் - மனைவி இருவருக்கும் இடையே அடிக்கடி தகராறு ஏற்பட்டு வந்துள்ளது.

அதேபோல கடந்த வெள்ளிக்கிழமை இரவு கணவன் - மனைவிக்கு இடையே வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது.

இதன்போது, கணவன் மனைவியை கூரிய ஆயுதத்தால் தாக்கி கொலை செய்துவிட்டு தானும் தற்கொலை செய்துகொண்டுள்ளார்.

இதனையடுத்து, பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டபோது சம்பவம் இடம்பெற்ற இடத்தில் கொலைக்கு பயன்படுத்தப்பட்ட கோடரியை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

உயிரிழந்த இருவரின் சடலம் பிரேத பரிசோதனையின் பின்னர் அனுராதபுரம் வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளில் மிஹிந்தலை பொலிஸார் ஈடுபட்டு வருகின்றனர்.(05)

# தங்க பிஸ்கட்டுகளுடன் இந்தியப் பிரஜை கைது

கட்டுநாயக்க விமான நிலையத்தில் தங்க பிஸ்கட்டுகளுடன் 26 வயதுடைய இந்திய பிரஜை ஒருவர் சனிக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

கட்டுநாயக்க விமான நிலைய குடிவரவு பயணிகள் முனையத்தில் சுமார் மூன்று கோடி ரூபா பெறுமதியான தங்க பிஸ்கட்டுகளை காற்சட்டைப் பையில் மறைத்து வைத்திருந்தபோதே இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர் கடந்த 6ஆம் திகதி சென்னையிலிருந்து வணிகப் பயணியாக வந்து பெங்களூர் திரும்புவதற்காக சனிக்கிழமை கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு சென்றுள்ளார்.

அத்துடன், ஒரு கிலோ 158 கிராம் எடையுள்ள 09 தங்க பிஸ்கட்டுகளும், மேலும் 03 தங்க பிஸ்கட்டுகளும் சந்தேக நபரின் கால்சட்டைப் பையில் மறைத்து வைக்கப்பட்டிருந்தன. (05)



# வாகனங்களை அடித்து உடைத்து தீ வைத்து தப்பிச்சென்ற கும்பல்

## யாழ்ப்பாணத்தில் சம்பவம்; பெண் காயம்



யாழ்ப்பாணத்தில் வன்முறை கும்பலொன்றினால் வேன் மற்றும் கார் சனிக்கிழமை இரவு தீ வைக்கப்பட்டுள்ளது.

இதன்போது தீயை அணைக்க முயற்சித்த பெண்ணொருவர் தீக்காயங்களுக்குள்ளான நிலையில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் - கோப்பாய் பகுதியில் வீடொன்றின் முன் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வான் மற்றும் கார் மீது மோட்டார் சைக்கிளில் வந்த இரு நபர்கள் தாக்குதல் நடத்தி, வாகனங்களுக்கு தீ வைத்துவிட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

அதை பார்த்த வீட்டார் தீயை அணைக்க முயன்றபோது, வாகனங்களின் உரிமையாளரினது தாய் தீக்காயங்களுக்கு உள்ளாகியுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (05)




# தங்கம் வென்ற நிந்தவூர் அல்-அஷ்றக் மாணவன்

(எஸ்.அஷ்ரப்கான்)

கிழக்கு மாகாண பாடசாலைகளுக்கிடையிலான மாகாணமட்ட மெய்வல்லுனர் போட்டி-2024 இல் நிந்தவூர் அல் அஷ்றக் தேசிய பாடசாலை மாணவன் எம்.எச். முஹம்மட் ஹின்ஸான் 12 வயது ஆண்கள் பிரிவில் 60 மீற்றர் ஓட்ட நிகழ்ச்சியில் முதலாம் இடம் பெற்று தங்கம் வென்றுள்ளார்.

மட்டக்களப்புவெபர்விளையாட்டு மைதானத்தில் சனிக்கிழமை நடைபெற்ற போட்டி நிகழ்வில் கலந்துகொண்டு வெற்றி பெற்ற இம்மாணவனை பயிற்றுவித்த விளையாட்டு பொறுப்பாசிரியர்களுக்கும் , அனுமதியை வழங்கி வழிப்படுத்திய அதிபர் ஏ.அப்துல் கபூர், வழிநடத்திய பாடசாலை விளையாட்டு பயிற்றுவிப்பாளர் ஐ.எம்.எஸ்.இன்பாத் மௌலானா உட்பட இணைப்பாடவிதானத்துக்கு பொறுப்பாக இருந்து ஒருங்கிணைக்கும் உதவி அதிபர் எம்.எம். உவைஸ் ஆகியோருக்கும் பாடசாலை சமூகம் நன்றிகளை தெரிவித்துக்கொள்வதாகதெரிவித்துள்ளது.(05)

# ஒலுவில் அல்-ஹம்றா மகா வித்தி மாணவி தங்கம் வென்று சாதனை



(எஸ்.அஷ்ரப்கான்)

கிழக்கு மாகாண பாடசாலைகளுக்கிடையிலான மாகாணமட்ட மெய்வல்லுனர் போட்டி-2024 இல் ஒலுவில் அல்-ஹம்றா மகா வித்தியாலய மாணவி ஆர்.எப்.ஸமா 'டிஸ்கஸ் துரோ'

நிகழ்ச்சியில் முதலாம் இடம் பெற்று தங்கம் வென்று சாதனை நிலைநாட்டினார்.

மட்டக்களப்புவெபர்விளையாட்டு மைதானத்தில் சனிக்கிமை நடைபெற்ற போட்டி நிகழ்வில் கலந்து கொண்டு வெற்றி பெற்ற இம் மாணவியை பயிற்றுவிக்க, இப்போட்டிகளுக்காக ஆலோசனை மற்றும் அனுமதியினை வழங்கிய அதிபர் அஷ்-ஷெய்க் யு.கே.அப்துர் ரஹீம், பிரதி, உதவி அதிபர்களுக்கும் மாணவர்களை பயிற்றுவித்து அழைத்துச்சென்ற விளையாட்டுப் பொறுப்பாசிரியரும் இலங்கை மெய்வல்லுனர் சங்கத்தின் பயிற்றுப் விப் பாளருமான ஆர்.நௌசாட், விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர் ஏ.அஸ்மத் சஹி மற்றும் பலவழிகளிலும் ஆலோசனைகள் வழங்கி உதவிய உடற்கல்வி ஆசிரியர் ஏ.எம்.கியாஸ், இணைப்பாடவிதானத்திற்கு பொறுப்பான பிரதி அதிபர் ஜே.வஹாப்தீன் உட்பட ஒத்துழைத்த நிர்வாகத்தினருக்கும் பாடசாலை சமூகம் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்வதாக அறிவித்துள்ளது. (05)

# 2019ஆம் ஆண்டுடன் ஒப்பிட்டால் தேர்தல் வன்முறைகள் குறைவு

## ஆணைக்குழு தகவல்

2019 ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலுடன் ஒப்பிடும்போது தேர்தல் வன்முறைகள் 43 வீதத்தால் குறைவடைந்து காணப்படுவதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

ஜூலை 31ம் திகதி முதல் செபரெம்பர் ஐந்தாம் திகதி வரை 2460 தேர்தல்வன்முறைகள் பதிவாகியுள்ளதாக தெரிவித்துள்ள தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன்ஸ்ரீரத்நாயக்க இவற்றில் பெரும்பாலான முறைப்பாடுகள் (2387) தேர்தல் சட்ட மீறல்கள் என்ற வகைக்குள் அடங்குகின்றன எனத் தெரிவித்துள்ளார்.

11 முறைப்பாடுகளை மாத்திரம் வன்முறைகள் எனக் குறிப்பிடலாம் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது 2019 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது தேர்தல்வன்முறைகள் 43.7 வீதம் வீழ்ச்சியடைந்துள்ளதை வெளிப்படுத்துகின்றது, 2019 இல் தேர்தல் சட்டமீறல்கள் 4234 ஆக காணப்பட்டன, இம்முறை இதுவரை 2387 ஆக பதிவாகியுள்ளன என அவர் குறிப்பிட்டுள்ளார்.

வன்முறைகள் குறிப்பிடத்தக்க அளவு குறைவடைந்துள்ளன 11 சம்பவங்கள் மாத்திரம் பதிவாகியுள்ளன, 2019 இல் 34 சம்பவங்கள் காணப்பட்டன என தேர்தல்கள் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.(05)

காலைக்கதிர் Kalaikkathir





# ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் மத்திய குழு கூட்டம்

(தில்சாத் பர்வீஸ்)

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் மத்திய குழு செயலாளர் எம்.எஸ்.எம்.அசாருதீன் தலைமையில் சனிக்கிழமை சம்மாந்துறை அப்துல் மஜீட் மண்டபத்தில் இடம்பெற்றது.

குறித்த கூட்டத்தில் பொதுக் கூட்டங்கள், வட்டார





ரீதியான கருத்தரங்குகள், வட்டார ரீதியான காரியாலங்கள் திறத்தல், வட்டார ரீதியான வீடு வீடாகச் செல்லும் செயற்பாடுகளை முன்னெடுத்தல் போன்ற பல விடயங்கள் இக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

இந்நிகழ்வில், முன்னாள் நாஜுளுமன்ற உறுப்பினரும்,ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் பிரதித் தலைவர் எம்.ஐ.எம். மன்சூர் , ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதி செயலாளர் மன்சூர் ஏ காதர், உயர்பீட உறுப்பினர் அஸீஸ், ஏ.எம்.தபீக், முன்னாள் சம்மாந்துறை பிரதேச சபை உறுப்பினர் சட்டத்தரணி எம்.எம்.செளபீர், மத்திய குழு செயலாளர் எம்.எஸ்.எம் அசாருதீன், முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் சட்டத்தரணி யூ.கே.சலீம், முன்னாள் சம்மாந்துறை பிரதேச சபை உறுப்பினர் எஸ். நளீம், கலாநிதி எஸ்.எல்.றியாஸ், சம்மாந்துறை இளைஞர் அமைப்பாளர் அர்சாத் இஸ்மாயில் கிளை தலைவர்கள் மற்றும் கட்சியின் முக்கியஸ்தர்களும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.(05)





# காத்தான்குடி பதுரியா ஜும்ஆ பள்ளிவாசலுக்கு ரணில் வருகை

'இயலும் ஸ்ரீலங்கா' வெற்றிப் பேரணியின் கல்குடா மற்றும் ஓட்டமாவடி பொதுக்கூட்டங்களில் கலந்துகொள்ளச் சென்ற ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க காத்தான்குடி - 05இல் அமைந்துள்ள பதுரியா ஜும்ஆ பள்ளிவாசலுக்கு நேற்று (ஞாயிற்றுக்கிழமை) முற்பகல் விஜயம் செய்தார்.

அங்கு அப்துல் ஜவாத் ஆலிம் வலியுல்லாஹ் நிதியத்தின் தலைவர் அப்துர் ரஊப் மிஸ்பாஹி உட்பட அங்கு வருகை தந்திருந்த மக்களுடன் ஜனாதிபதி சிநேகபூர்வ உரையாடலிலும் ஈடுபட்டார்.

அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா, வடமேல் மாகாண ஆளுநர் நஸீர் அஹமட், பாராளுமன்ற உறுப்பினர்களான ஏ.எல்.எம். அதாவுல்லா, அலி சாஹிர் மௌலானா மற்றும் முன்னாள் பிரதி மேயர் எம்.எம்.ஜசீம் ஆகியோர் இதன்போது இணைந்திருந்தனர்.

பதுரியா ஜும்ஆ பள்ளிவாசலின் கீழ் 02 ஜும்மா பள்ளிவாசல்கள் உட்பட 04 பள்ளிவாசல்கள் 07 குர்ஆன் பாடசாலைகள், 02 அரபிக் கல்லூரிகள் மற்றும் 30க்கும் மேற்பட்ட சமூக சேவை நிறுவனங்கள் இயங்கி வருகின்றன.

பதுரியா ஜும்ஆ பள்ளிவாசலுக்கு விஜயம் செய்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, காத்தான்குடி நகர வர்த்தகர்கள் மற்றும் பொதுமக்களை சந்தித்து அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து அவர்களின் கருத்துக்களையும் கேட்டறிந்தார். (05)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 09.09.2024இல் வெளியிடப்பெற்றது